1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA.
phone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆனி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 24-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### குருமாரும் செபமாலைப்பலனும்

தொமினிக்குவின் சபைச் செபமாலைப்பலன்கள் அளிக்கவும், மாதாவின் அற்புதபாவணிக்கம், ஆசீர்வாதப் பர்பாவணிக்கம் ஆசீர்வதிக்கவும் இம்மேற்றிராசனத்திலுள்ள சகலகுருப்பிரசாதிகளுக்கும் தற்போது அனுமதியருளப்பட்டிருக்கிறது.

### மன்னாரும் இந்தியதொழிலாளரும்

தற்காலீக வாச அனுமதிச்சட்டத்தை அரசாங்கம் கடுமையாக்கியது முதல் மன்னார்ப்பகுதியில்வாழும் இந்தியர்கள்—பெரும்பான்மையாக இந்திய தொழிலாளர்கள் தினந்தோறும் கூட்டங் கூட்டமாகத் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்புகின்றார்கள். அதனால் அவர்கள் அதிகமாக வசித்திருந்த பேசாலை, தலைமன்னார், எருக்கலம்பிட்டி ஆதியாமிடங்கள் காடாகக் காட்சியளிக்கின்றன. வியாபாரங்குன்றிக் கடைகள் சோம்பிக்கிடக்கின்றன. அவர்கள் திடீரென்று இலங்கையை விட்டுக் கூட்டங்கூட்டமாகச் செல்வதாலே மன்னார்ப்பகுதியில் கடற்தொழிலுக்குப் பெரும்பங்கம் ஏற்பட்டிருக்கிறது. கடற்தொழிலிலே திறமையுடையவர்களான இந்தியதொழிலாளர்களின் இடங்களுக்கு எவ்விதம் சிறந்ததொழிலாளர்களைக் கண்டுகொள்வதென்பதுபற்றி அங்குள்ள கடற்தொழிற் சங்கங்கள் ஆலோசித்து வருகின்றன.

### பிரதமரின் வீரகர்ச்சனை

குருநாகலைச்சேர்ந்த வாரியப்பளையில் சென்றஞாயிறுவாரம் நிகழ்ந்த ஓர் பொதுக்கூட்டத்திலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பேசியபோது: "ஜனநாயக நாடான இலங்கை நிச்சயமற்ற ஓர் நிலையில் இன்று இருந்துவருகிறது; ஒரு ஜனநாயக ஆட்சியின்கீழ் எவரும் எதையுஞ்சொல்லலாம்; செய்யலாம்; நாசகாரசக்திகள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும், இந்நாட்டின் சமாதானமுன்னேற்றத்திற்கு இடைஞ்சல்கள் உண்டுபண்ணுவதற்கும் ஜனநாயக வேஷத்தை உபயோகிக்கின்றன; தீயவர்களையும், கம்யூனிஸ்தர்களையும் இந்நாட்டிலே ஒழித்துக்கட்ட முயற்சியெடுப்பதையிட்டு நான்ஓர் 'பாசிஸ்தர்' என்றும், கலப்பற்ற ஹிற்லர் என்றும் அழைக்கப்படுகிறேன்; என்னை எப்படி அழைத்தாலும் பரவாயில்லை; இது எனது நாடு; இங்கே நான்பிறந்தேன்; நான் உயிரோடிருக்கும்வரை எனது நாட்டுக்காக இயன்றளவு சேவைசெய்வேன்; சமயத்தில் ஓர் மறுமலர்ச்சியை உண்டுபண்ணும்படி இந்நாட்டுமக்களுக்கு ஓர்வேண்டுகோள் விடுக்கிறேன்; இந்த மறுமலர்ச்சி நாட்டிலே ஒழுக்கத்தை உயர்த்திக் கம்யூனிஸத்தை ஒழித்துவிடும்" எனக் கூறினார்.

### புதுநன்மையும் உறுதிப்பூசுதலும்

நமமுடைய ஆசனக்கோவிலிலே சென்ற 17-ந் திகதி வியாழக்கிழமை சின்னசசம்மனசுகளின் திருநாளென்று அழைக்கப்படுகின்ற புதுநன்மைப் பெருநாளாகும். அன்றுகாலை பாடசாலைப்பிள்ளைகளும், மற்றுஞ் சிலருமாக 126பேர்புதுநன்மைபெறும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அவ்வேளை அவர்களின் பெற்றாரும், இனசனரும் கோவிலிலே திரளாகச் சமூகமளித்திருந்து பின்னர் அவர்களைத் தத்தம் இல்லங்கட்கு அழைத்துச்சென்று ஞானப்பரிமளிப்பான கொண்டாட்டம் நடத்தினார்கள். அன்றுசாயந்தரம் சம்பத்திரிசியார் கல்லூரி, மடத்து ஆங்கிலகலாசாலை, தமிழ்ப்பாடசாலை, சென் சாள்ஸ்பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளும், வேறுபிள்ளைகளும், வளர்ந்தவர்களுமாக 226 பேருக்கு மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவராலே உறுதிப்பூசுதல் அருளப்படலாயிற்று.

### பிரதமரின் யாழ்ப்பாணவிஜயம்

ஏற்கனவே அறிவித்திருந்தபடி பிரதமர் சேர் ஜோண கொத்தலாவல அவர்கள் இம்மாத இறுதியிலே யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யமாட்டாரென்றும, வருகிற புரட்டாசியில்தான் அவர் இங்குள்ள தொகுதிகளைத் தரிசிப்பாரென்றும் தெரியவருகிறது.

### கம்யூனிஸ்த புத்தகங்கள்

கொழும்புத்துறைமுகத்திலே இறக்குமதிக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கைப்பற்றிய பெருந்தொகையான கம்யூனிஸ்த புத்தகங்கள் அம்பாரமாய்க் குவிந்துகிடக்கின்றன. இவைகளை என்னசெய்வதென்று வர்த்தகமந்திரியார் அடுத்தவாரத்திலே முடிவுசெய்யவிருக்கின்றார். இந்தப்புத்தகங்களெல்லாம் கொழும்பிலுள்ள "மக்கள் பதிப்பகம்" என்ற புத்தகநிலையத்துக்கு வரலாயின. துறைமுகப்பகுதித் தபாற்பகுதிமுழுவதும் கம்யூனிஸ்தபுத்தகங்களால் நிரம்பிப்போய் விட்டதென்றும், புதிய புத்தகங்களை அடுக்குவதற்குத் துறைமுகப்பகுதியில் இனிமேல் இடமில்லையென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### தேர்தலில் ஏற்பட்டகலகம்

தெகிவலை-கற்கிசைப் பட்டினசங்க தேர்தல் சென்றசனிக்கிழமை நடந்து அதிலே பிற்பகல் 6 மணிக்குக் கொகுவலையில் முதலாம்வட்டார முடிவுகள் தெரிவிக்கப்பட்டதும் ஓர்கலகம் ஏற்படலாயிற்று. நாலாபுறங்களிலுமிருந்து நாட்டுவெடிகுண்டுகளும், கற்களும் வீசப்பட்டு இருபதுபேர் காயமடைந்தார்கள். கலகம்நடந்த இடத்தையடுத்துத் தங்கள்வீடுகளில் இருந்தவர்கள் பயப்பிராந்திகொண்டு தங்கள் வீடுகளிலிருந்தும் ஓடித்தப்பினார்கள். இந்தமுதலாம் வட்டாரத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்தவரும், பாராளுமன்ற அங்கத்தவரும், தற்போது அவ்வட்டாரப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவருமான திரு. டி. எஸ், ஜயசிங்க அவர்கள் தெரியப்படலாயினர். இந்தவட்டாரத்திலே இடதுசாரிகளின் [illegible]

### மரியாயின்வருடத் திருயாத்திரை

கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஒருதொகையான கத்தோலிக்கஆடவர்களும, பெண்மணிகளும் மரியாயின்வருடத் திருயாத்திரையாக இன்றுதினம் கொழும்பிலிருந்து பிரயாணமாகின்றார்கள். இவர்கள் றோமாபுரி, லூர்துபதி, பாத்திமா ஆதியாம் திருசேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு கடைசியாக இரண்டுவாரம் லண்டனில் தங்கியிருந்தபின் இலங்கைக்குத் திரும்புவார்கள். றோமாபுரியிலே தங்கியிருக்கும்போது இவர்கள் பரிசுத்த பாப்பரசரின் பேட்டிபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தயாத்திரிகர்களுக்கும், இவர்கள் குடும்பத்தினருக்குமாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்குக் கொழும்புஅதிமேற்றிராணியார் தமது சிற்றாலயத்திலே சற்பிரசாத ஆசீர்வாத ஆராதனையொன்று நடத்தினார். திரு. பி. ஏ. றேமண்ட் பெறெரா அவர்கள் யாத்திரைத் தலைவராகத் தெரியப்பெற்றிருக்கின்றார்.

### திரு. லூயிஸ் போல், பி. ஏ.

கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்களில்ஒருவரான திரு. லூயிஸ் போல் அவர்கள் சென்னைச் சர்வகலாசாலை பி ஏ. பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் இந்தியாவிலே முன்னர் டிஸ்திறிக்கோட் நீதிபதியாயும், இளைப்பாறியபின்னர் யாழ்ப்பாணத்திலே சென் வின்சென்ற் டீ போல்சபைப் பங்கிகளின் தனிச்சங்க தலைவராயும் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. ஆர். ஜே. போல் அவர்களின் இரண்டாவது புதல்வராவர்.

### பனைவெல்லச் செய்கைப்பயிற்சி

இன்றுமுதல் அடுத்த 30-ந் திகதி வரையிலே பலாலிதெற்கிலுள்ள பனைவெல்லம் தயாரிக்கும் நிலையத்தில் வடபகுதியிலுள்ள பனைவெல்லப் போதகாசிரியர்களுக்கும், பனம்பொருள் உற்பத்தி ஐக்கியசங்கப் பிரதிநிதிகளுக்கும் இந்திய முறையிலே பனைவெல்லம் தயாரிக்கும் முறை பயிற்றப்படவிருக்கிறது. இந்த ஒருவாரப் பயிற்சியில் நல்லமாதிரியான பனைவெல்லம் தயாரிக்கும்முறையை அங்கே இவர்களெல்லாம் இந்திய பனம்பொருள் உற்பத்தி நிபுணரான திரு. ஏ. ரி. காசி அவர்களிடம் கற்றுக் கொள்வார்கள்.

### யந்திரம் வேலைசெய்யவில்லை

நவக்கிரியிலும், அதன் அண்மையிலும் காணப்படுகின்ற 250 ஏக்கர் பண்படுத்தக்கூடிய நிலத்தின் கற்களைநீக்கிப் பயிர்ச்செய்கை, குடியேற்றம் முதலியவற்றிற்குப் பயன்படுத்தக் கமத்தொழிற்பகுதி அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். அங்கே இவர்கள் தருவித்த கல்லுடைக்கும் யந்திரம் சென்ற புதன் கிழமை யன்று கற்பாறைகளை நொருக்கி நிலத்தை மட்டப்படுத்தும் வேலைக்குப் பாவிக்கப்பட்டது ஆனால், அது தரைமேல் காணப்படும் கற்களை நொருக்கி அப்புறப்படுத்தியதேயன்றித் தரைக்குக் கீழிருந்த கற்களை நொருக்கி வெளியேற்ற அதனால் முடியாமற் [illegible]

நிகழும்ஆனிமாதம் 13-ந்திகதியன்று மதிரித்நகரிலே காலஞ்சென்ற தமது அருமைச்சகோதரரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையின் உதவிச்சிரேஷ்டரும், தற்போது இலங்கை விக்காரிய தரிசகராக வந்திருப்பவருமான மகாவண. எஸ். லுக்காஸ், O. M. I. சுவாமியவர்கள் அனைவரையும் பரிவாகக்கேட்டுக்கொள்ளுகின்றார்கள்.

### தேவநற்கருணைத் திருநாள்

நமது ஆசனக்கோவிலிலே சென்ற 20-ந்திகதி ஞாயிறுவாரம் தேவநற்கருணைத்திருநாள் வழமைபோல ஞானப்பரிமளிப்புடன் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 7 மணிக்கு அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையின் உதவிச்சிரேஷ்டரான மகாவண. எஸ். லூக்காஸ் சுவாமியவர்களால் பெரியபாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் குருமார், குருத்துவ மாணவரும், பட்டணத்தின் நாலுபகுதிகளிலுமிருந்து நாலுகலாசாலைகளையுஞ் சேர்ந்த மாணவர் மாணவிகளும், பக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், மற்றும் பெருந்திரளானமக்களும் கோவில்கொள்ளாது தேங்கியிருந்த சமூகத்தில் சுவாமியவர்களே வேஸ்பர் பாடியதன்மேல் கதிர்ப்பாத்திரத்தைத் தமதுகரங்களிலேந்தித் திவ்வியசற்பிரசாதநாதரை வீதியெழுந்தருளச் செய்தனர். பக்தர்குழாங்கள் புடைசூழ்ந்து செபங்கள் ஓதியும், திவ்வியகானங்கள் பாடியும், தீபதூபங்கள் காண்பித்தும், புஷ்பாஞ்சலிசெய்தும்நிற்க, அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாக நற்கருணைநாதர் திருப்பவனி கொண்டார். புதுமைமாதாகோவில் முன்றிலிலும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பெரியவாயிலிலும் அமைக்கப்பெற்றிருந்த அலங்காரமிக்க பீடங்களிலே திவ்வியநற்கருணை எழுந்தருளச்செய்து ஆசீர்வாதம் அருளப்பெற்றது. ஈற்றிலே கோவிலில் "தெதேயும்" பாடி அருளப்பெற்றஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

### நோயாளரும் அரிசிக்கூப்பனும்

அரசினர் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை அனுமதிக்க நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் அவர்கள்மட்டிலே அரிசிப்பங்கீட்டுப் புத்தகவிதியைக் கடுமையாக அனுட்டிக்கக்கூடாதென்று சுகாதாரமந்திரியின் நிரந்தரகாரியதரிசி தெரிவித்திருக்கின்றார். ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுமாறு சிபாரிசு செய்யப்பட்ட நோயாளிகள்பலர் அரிசிப்பங்கீட்டுப் புத்தகம் கொண்டுவரவில்லை என்றகாரணமாக அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் ஆஸ்பத்திரிகளில் சேரவரும்போது அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தைக் கொடாதிருந்தபோதிலும் நோயாளர்களை அனுமதிக்க மறுக்கக்கூடாதென அவர்கூறுகின்றார். ஆனால், பிற்பாடு அவர்கள் அதைத்தருவித்துக்கொள்ளும்படியாகக் கேட்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றைக்கோ ஒருநாள்...

சூரியன் அஸ்தமனமாகிக்கொண்டிருக்கிறது. செந்நிறக்கதிர்கள் அலைகடலின்மேல் வீசுவதால் அது ஓர்வித சொலிப்பை அடைந்திருக்கிறது. கரையிலிருந்து கடலுக்குள் ஏறக்குறைய நூறுஅடிதூரத்துக்கு ஓர் பாலம் போடப்பட்டிருக்கிறது. அப்பாலத்தின் ஒருகோடியில் ஓர்மனிதன் மிகுந்தகவலையுடன் உட்கார்ந்திருக்கிறான். அவனது இருண்டகண்கள் ஆழ்கடலிலே அசைந்துகொண்டிருந்த வள்ளங்களை நோக்கிகொண்டிருந்தன. கரையிலே சிறிதுதூரத்தில் சைமனும், அவனதுமகன் சந்தியாகும் தங்கள்வலையைச் செப்பமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். பாலத்தில் உட்கார்ந்திருந்தமனிதன் பாலியன் சந்தியாகுவையும், அவனதுதகப்பன் சைமனையும் ஓர்வித கர்வத்தோடுநோக்கிப் பெருமூச்செறிந்து: “இதுவும் என்கதியா? கடற்தொழிலில் பலபேரைவைத்துப் பணம்சம்பாதித்தயான் இப்போது தன்னந்தனிமையாய்த் தவித்துக்கொண்டிருப்பதும் என் காலக்கொடுமையே; என் துணைவர்கள் தான் என்னை விட்டுப் பிரிந்தார்களென்றால், என் ஆருயிர்ப் புத்திரர்இருவரையும் இந்தஆழ்கடலுக்கு இரையாக்கநேர்ந்ததே; இதுவெல்லாம் அப்பாமகடவுளின் செயல் அல்லவா? சரி, இனி என்செய்வது? இப்போது பொழுதும் இருட்டுகிறது. ஆகவேண்டிய வேலைகளைக் கவனிப்போம்” என்று எழுந்து சென்றான் யேசுதாசன்என்ற அந்த மனிதன்.

யேசுதாசன் தன் இனத்தவர்கள்கூடியிருந்த இடத்திற்குச்சென்று தனது வலைகளைச் செப்பமாக்கத் தொடங்கினான். சிறிதுநேரம் சென்றது. கோவிலில் மணிஅடிக்கும் சப்தம்கேட்டது. அங்கு வேலைசெய்துகொண்டிருந்த மனிதர்எல்லோரும் தங்கள்வேலைகளை விட்டுக் கோவிலைநோக்கிச் சென்றனர். ஆனால், யேசுதாசன்மட்டும் அந்த மணிச்சப்தத்தைச் சிறிதும் கேளாதவன்போல் தனது வேலையின்மேல் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். கூட்டத்தோடு கோவிலுக்குச் செல்லும் மரியாளும், அங்கு குந்தியிருக்கும் தகப்பனைநினைத்துக் கவலைப்பட்டு, அவன் மூன்றுவருடங்களுக்கு முன் சந்தோஷமாகச்சீவித்ததையும், பின்னர் தன்புதல்வர்கள் இருவரும் ஒரேஇராவில் கடலுக்கு இரையானதிலிருந்து அவன்கொண்ட மாற்றத்தையும், அன்றுமுதல் அவன் கடவுள்மேல் கொண்ட வெறுப்பையும்பற்றிச் சிந்தித்து அவனது மனந்திரும்புதலுக்காகச் செபித்துக்கொண்டுசென்றாள்.

சிலநிமிஷங்கள் சென்றன. கோவிலில் மாலைஆராதனைமுடிந்ததும் மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். படகோட்டிகளும, அவர்கள்குடும்பத்தினர்மட்டும் கடலின்பக்கம்வந்தார்கள். படகோட்டிகள் தங்கள் படகுகளில் ஏறிக்கொண்டு புறப்பட ஆயத்தமானார்கள். அப்பொழுது தாழ்ந்தகுரலிலே அக்கூட்டத்தில்நின்ற தனது மகளை நோக்கி: “மரியாள்! இத்தன்மையாகவே காற்றுஇருந்தால் எங்களுக்கு இன்றிரவு நன்றாக மீன்கள்அகப்படும்; போய்வருகிறேன்; சந்தோஷமாயிரு” என்று ஆசிகூறிப் பாயைவிரித்து ஏனைய படகுகளோடு புறப்பட்டான் யேசுதாசன். தகப்பனைவழியனுப்பிய தனயை தனதுகண்களில் கண்ணீர் ததும்பத் திரும்பவும் கோவிலைநோக்கிச்சென்றாள். அவளுடைய இருதயம் நொருங்குண்டிருந்தது. அநேக நாட்களாகத் தனதுதகப்பனுக்குக் கடவுள்மட்டுள்ள பக்திக்குறைவு நீங்கும்படியாக வேண்டிக்கொண்டு வந்தாள். தனதுசெபம் அநேக நாட்களாகப் பலன் தராமற்போயினும் அதையிட்டு அவள் மனஞ்சோர்ந்து போகவில்லை. என்றைக்கோ ஓர்நாள் தனதுசெபம் பலிதமாகுமென்ற முழு நம்பிக்கையுடன் இருந்தாள்.

யேசுதாசன் தனதுபடகின் ஓர்புறத்தில் உட்கார்ந்துகொண்டு அதனைச் செலுத்தினான். அவனுடன் வந்த படகுகள் முன்னாகச் சென்றுகொண்டிருந்தன. துணைப்படகுகள் முன்னணியில்சென்றதால் காற்று அவனது படகின்பக்கமாக மத்திமமாகவீசியது. ஒருசுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு, படகின்பாயையும் சீர்ப்படுத்திக்கொண்டு மீன்பிடிக்கும்இடத்தைப் போய்ச்சேர்ந்தான். எல்லோருமாகத் தங்கள்வலைகளைவீசினர். ஏராளமான மீன்கள் பிடித்துத்திரும்பினர். யேசுதாசனும் அன்று தனக்குஅகப்பட்ட ஏராளமானமீன்களினால் அதிகலாபம் கிடைக்குமென்ற சந்தோஷத்துடன் படகைச்செலுத்திக் கரையைநெருங்கினான். ஆங்குபெண்கள் கூட்டங்கூட்டமாகநின்று தங்கள் இனத்தவர்கள் சென்றிருந்தபடகுகளை எதிர்பார்த்து நின்றார்கள். மரியாளும் அங்கே இருக்கவேண்டும். ஏனெனில், தனது தகப்பனின்படகு கரைவந்துசேர்ந்ததும் அவனுடைய மீன்களை எண்ணி அவைகளை விலைகூறவேண்டும். ஆனால், மரியாள் அங்குகாணப்படவில்லை. யேசுதாசனின்மனம் மாறுபட்டது. வழக்கமாக வரும்மரியாள் இன்று அங்குவாராதகாரணம என்னவென்று கலங்கினான். படகும் கரைசேர்ந்தது. அப்போது தனதுபடகைநோக்கி ஓர் பெண் விரைந்துவரக் கண்டான். “ஐயா! சீக்கிரம்வாரும்; தாமதம் செய்யவேண்டாம்; உடனே கீழே இறங்கும்.” “என்ன எமிலி! ஏதும் நேர்ந்ததா மரியாளுக்கு?”

“ஆம், நேற்றிரவு மரியாள் கோவில் படிக்கட்டுகளிலிருந்து கால்தடுமாறிக் கீழே விழுந்துவிட்டாள்; அவளுக்கு நெஞ்சில் பலத்தஅடி; உயிர்......” “என்ன, உயிருக்கு ஆபத்துவருமோ?” “இல்லை, பிழைப்பதுமாத்திரம் சர்வேசுரன்செயல்.” மரியாளின் நிலைமையைக் கேட்டதும் யேசுதாசனின் அறிவுசோர்ந்தது. உணர்வற்றுத் தரைமீதுசாய்ந்தான். இதைக் கண்ணுற்ற ஏனையமனிதர் அவனைத் தூக்கிக்கொண்டுபோய் வீடுசேர்த்தனர். சிறிதுநேரஞ்சென்றதும் அவனுக்கு அறிவுவந்தது. எழுந்துஉட்கார்ந்தான். “ஆ! மரியாள், என்கண்ணின் மணியே! என்கவலையைத் தீர்த்துநிற்கும் காரிகையே! இனியான் என்செய்வேன்? உனது தமையன்மார்கட்குப் பின் நீயல்லவோ எனக்கு ஏகஆறுதலாயிருந்தாய்; அனாதையான எனக்கு உன்னையும் கொடுத்துவைக்கக் கடவுள் சித்தங்கொள்ளவில்லையே; என்செல்வமே! இனிஎன்செய்வேன்?” என்று எழுந்து மரியாளின் படுக்கையண்டை சென்றான். மரியாளுக்குச் சுவாசம் மாத்திரம் வந்துகொண்டிருந்தது. கைகால்கள் அசையவில்லை. கண்கள் மூடியிருந்தன. யேசுதாசன் பக்கத்திலிருந்த எமிலியைநோக்கி: “அம்மா! தயவுசெய்து டக்றரை..............” இவ்வாறுசொல்லி முடிப்பதற்குள்ளாக மரியாளின்கண்கள் திறந்தன.

“வேண்டாம்அப்பா, டக்றர்வேண்டாம்; இனிவேண்டியது கடவுளின் உதவியே! நெஞ்சில் வலி அதிகமாயிருக்கிறது; கடவுளுக்குச் சித்தமுண்டானால் யான் உயிர்பிழைப்பேன்; நீங்கள் டக்றரின்உதவியைத் தேடுவதைவிடச் கோவில்சென்று கடவுளின் உதவியைத்தேடுவது உசிதமாயிருக்கும்” என்று மெதுவாகமொழிந்தாள் மரியாள். இதைக்கேட்டதும் யேசுதாசன் சற்றே மனந்தெளிந்தான். அவன் மனக்கவலை சற்று நீங்கியது. “சரிஅம்மா, அப்படியேசெய்கிறேன்; யான்வரும்வரையும் எமிலி உனக்குத் துணையாயிருப்பாள்” என்றுசொல்லிக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### கலிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—4-ம் பிரியதத்தம்

### 44. திருக்குமாரன் காணமற்போதல்

அன்று பாஸ்காபண்டிகை முடிவு தினம். தேவாலயத்திலே சனக்கூட்டம் அதிகமாயிருந்தது. யாத்திரிகரின்முகத்திலே கவலைக்குறி காணப்படுகின்றது. தேவசந்நிதானத்தை விட்டுப்பிரியப் போகிறோமேஎன்ற எண்ணம் அவர்கள்மனதை வருத்திவாட்டுகிறது. அதனால் தங்கள்இல்லங்களுக்குச் செல்வதற்குமுன்னதாகத் தேவாலயதரிசனம் செய்கின்றனர். நேர்த்திகளை நிறைவேற்றுகின்றனர். நினைத்த காரியங்கள் கைகூடுமாறு வேண்டுகின்றனர். ஈற்றில், தேவனுக்குத் தங்களை ஒப்படைத்துப் பிரியாவிடைகூறி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

யாத்திரிகர் கூட்டங் கூட்டமாகத் தேவாலயத்தைவிட்டு வெளிக்கொள்ளுகின்றனர். ஆண்கள் ஒருவழியாகவும், பெண்கள் ஒருவழியாகவும் வெளியேறுகின்றனர். சட்டஒழுங்குப் பிரகாரம் ஆண்கள்போகும் வழியாகச் சூசைமாதவனும், பெண்கள்போகும வழியாகத் தேவதாயாரும் செல்கின்றனர்.

திவ்வியயேசு கைத்தாதையுடன் வருகிறார்எனத் தேவதாய் எண்ணிக்கொண்டு வழிநடக்கின்றாள். அதுபோலவே, சூசையப்பரும் அன்னையோடுகூட அவர் வருகிறார்என எண்ணிக் கொண்டு செல்கின்றார்,

கலிலேயாவைநோக்கி யாத்திரைக்கூட்டம் சென்றுகொண்டிருக்கிறது. முன்போலவே யாத்திரிகர் தேவகீதங்களைப் பாடிக்கொண்டே வழிநடக்கின்றனர். ஆயினும் தேவாலயத்திற்கு வரும்போது காட்டியசந்தோஷமும், அக்களிப்பும் அப்போது காணப்படவில்லை. பகல்முழுதும்நடந்து மாலைக்காலமானபோது ஓரிடத்தில் தங்கி இராக்காலத்தைக் கழிக்க முற்படுகின்றனர். யாத்திரைக்கூட்டத்தினர் அவ்வாறு தங்கியபோதுதான் ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர். கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லாருமாகத் தங்கள் இராவுணவைத்தயாரிக்க முற்படுகின்றனர். அதனால் எங்கும்சத்தமும், ஒரேஆரவாரமுமாக இருக்கின்றது.

அப்போதுதான் சூசையப்பரும் தேவதாயாரும் ஒருவரைஒருவர் சந்திக்கின்றனர். இருவரும் ஒருவரைஒருவர் ஏமாற்றத்துடன் உற்றுநோக்குகின்றனர். அந்த ஏக்கம்நிரம்பிய பார்வையே ஒருவர்கருத்தை மற்றவருக்குத் தெரிவித்துநிற்கிறது. “திருக்குமாரன் எங்கே?” என்பதுதான் அவர்களது அச்சம்நிரம்பிய பார்வையின்பொருளாகும்.

“திருக்குமாரன் உங்களோடுஇல்லையா?” என்றாள்தேவதாய். அவ்வினாவையே மாதாவிடமும் கேட்டுநிற்கிறார் சூசைமாதவர். “என்னுடன் வரவில்லை” என்ற விடையையே ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

“உன்னிடை இலைகொலென்(று)
இவளும் ஓதினள்
நின்னிடை இலைகொலென்(று)
அவனு நேடினன்
என்னிடை இலையென
இருவர் சாற்றினர்
மின்னிடை அசனிபட்
டெனவெர் தேங்கினர்.”

மின்னிவிழுந்த இடிபட்டாற்போல இருவரும் உளம்வெந்து ஏங்கிநிற்கின்றனர். உயிரில்லாத உடம்புபோலத் தேவமைந்தன்பிரிவைச் சகிக்கலாற்றாது அறிவழிந்து மூர்ச்சிக்கின்றனர்.

அறிமுகமானவரிடத்தெல்லாம் விசாரித்துப் பார்க்கின்றனர். கன்றைத் தேடுங் கறவைபோலக் கரைந்துகலங்கி அழுதபடியே எங்கும் தேடுகின்றனர். திருக்குமாரனின் அங்கஅடையாளங்களைக் கூறிக் கண்டவரிடமெல்லாம் விசாரித்துப் பார்க்கின்றனர்.

“நாங்கள் காணவில்லை” என்ற விடைதான் அவர்களுக்குக் கிடைக்கிறது.

கலிலேயாவை நோக்கிவந்த யாத்திரிகரிடையேதேடியும் அவரைக்காணவில்லை. மீண்டும் வந்தவழியைப்பார்த்துத் தேடிக்கொண்டு போகின்றனர். பழைய உறவின்முறையாரிடத்தும் தேடிப்பார்க்கின்றனர். திவ்வியயேசுவைக் காணப்பெற்றிலர்.

“செல்லகத் தனைத்திலுஞ்
சென்று தேடினர்
தொல்லகத் துறவினோர்
துடர்ந்து நாடினர்
வல்லகத் திலகமாள்
மகவைக் காண்கிலார்
கல்லகத் தாருமுட்
கலங்க விம்மினர்”

காணப்பெறாததால் கல்லுநெஞ்சினர்முதலாய் இரங்கிக் கலங்குமாறு விம்மிவிம்மி அழுகின்றனர். அங்ஙனமாக இருவரும் அழுதுபுலம்பித் திருமகனைநினைத்துச் சொல்வார்:

“தாயுநீ சேயுநீ
தவறி நாம்செயும்
தீயுநீ பொறுப்பவன்
சிறுவ வெம்விழி
பாயுநீ ருடன்உயிர்
பறிப்ப வோவிதோ
போயுநீ யருத்துயர்
புகுத்தி னையென்பர்”

“நீயே எங்களுக்குத்தாய்; நீயே எங்களுக்குஒருபிள்ளை; தவறிநாங்கள் செய்யும்பிழைகளைப் பொறுப்பவனும் நீயே; அவ்வாறாகமகனே, நாங்கள் நீங்காதழும் கண்ணீர்வழியாகக்கூட எங்கள்உயிரைப் பறிக்கவோ இன்று ஒளித்து அகன்றுபோனாய். தீராத் துயர்களை எங்கள்மனதிற் புகுத்தினாய்” எனப் புலம்பிநிற்கின்றனர்.

---

— பத்தாம்பத்திநாதரின் அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவத்தின்போது 44 கருதினால்மார் சமுகமளித்திருந்தனர். இவர்களில் 17 பேர் றோமைநகரிலே வசிப்பவர்கள். 8 பேர் இத்தாலிய மேற்றிராசனங்களிலிருந்து சென்றவர்கள். எஞ்சியகருதினால்மாருள் பிரான்சியர் 4 பேர். ஸ்பானியர் மூவர். அமெரிக்கர் இருவர். ஆர்ஜென்ரீனியர் இருவர். ஆங்கிலேயர், ஜேர்மனியர், ஆஸ்திரியர், பிறேசிலியர், சீரியர், சிலியர், கலம்பியர் ஒவ்வொருவர்.

— ஸ்பானியதேச அலிக்கான்ரே மாகாணத்தைச்சேர்ந்த திருமதி அன்ரோனியோ எனும்பெண்மணி சென்ற பெரியவியாழக்கிழமையன்று தனது சரீரத்தில் இரட்சகரின் திருக்காயங்கள் — விசேஷமாய் அவர் கசையடிபட்டபோது ஏற்பட்ட திருக்காயங்கள் அற்புதமாகப் பதியப்பெற்றனவெனச் செய்தி கிடைத்திருக்கின்றது. பெரியசனிக்கிழமைவரையிலே இவள் அறிவுநினைவற்றநிலையில் இருந்தாளாம். பின்னர் அந்தக்காயங்கள் மறைந்துபோயினவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## பத்திரிகையின் வாழ்த்துரை

பரிசுத்தபாப்பரசர் 78-ம் வயதிலே தமக்குஏற்பட்ட நோயிலிருந்து குணமடைந்ததையிட்டு நியூயோக் நகரிலே பிரசுரமாகும் "டெய்லி மிறர்" எனும்பத்திரிகை தனதுஆசிரியவசனத்திலே அவருக்கு வாழ்த்துரைகூறி எழுதியிருப்பதாவது: இந்தப் பெரும்வயதிலே அவர் தமது திருச்சபையைச் சேர்ந்தவர்களுக்காக மாத்திரமல்ல, ஆனல், சகல மனித வர்க்கத்துக்காகவுமே தமது அநேகதுறைகளிலும் தொடர்ந்து பணியாற்றி வருகின்ருர்; அநேகமாகச் சரித்திரத்தில் சிலபாப்புமாரே இவரைப்போலச் சமத்துவமான பாரக்கடமைகளை நிறைவேற்றியிருக்கிருர்கள்" என்பதே.

## வெற்றிப்பிரவேச ஊர்வலம்

அர்ச். பத்தாம்பத்திநாதரின் திருமேனியானது அவர் அர்ச்சியசிஷ்டபட்டம்சூடிய தினத்தின் மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை சம்பேதுருவானவர் மகாலயத்திலிருந்து அர்ச். மேரிமேஜர் மகாலயத்திற்குப் பெரும் வெற்றிப்பிரவேச ஊர்வலமாக எடுத்துச்செல்லப் பெற்றபோது ரோமைநகரினூடாக மூன்று மைல்நீளமான வீதியின் இருமருங்கும் பத்துலட்சம் மக்கள் வரிசையாகநின்று "அர்ச். பத்திநாதர் வாழ்க!" "பாப்பரசர் நீடூழி வாழ்க!" என்று ஆர்ப்பரித்து வாழ்த்தொலிசெய்தார்கள். புதிய அர்ச்சியசிஷ்டரின் திருவுடலைக்கொண்ட பளிங்குக் கண்ணுடிப் பேழையைத் தாங்கிய குதிரைவாகனத்தின்மீது பூமாரிபொழிந்தார்கள். இந்த ஊர்வலத்தில் இரண்டு மைல் நீளம்வரையிலே 18,000 மக்கள் கலந்து கொண்டார்கள்.

## அல்போன்ஸாவின் கல்லறையில்

திருவாங்கூரிலே கேரள கத்தோலிக்கமகாநாட்டைத்திறந்து வைப்பதற்காக வந்திருந்த பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதிஞல் வலேரியன் கிருசியாஸ்ஆண்டவர் சென்ற வைகாசிமாதம் 28-ந் திகதியன்று பாரணங்ஞானஞ்சென்று சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரீயின் கல்லறையைத் தரிசித்து அதற்குச்சமீபமான கல்லறைக் கோவிற் பெரிய பலிபீடத்தில் திவ்வியபூசை நிறைவேற்றினர். அதன்மேல் அவர்செய்த சுருக்கமான பிரசங்கத்திலே, அல்போன்ஸாவின் கல்லறையில் திவ்வியபூசை நிறைவேற்றத் தமக்குக்கிடைத்த அனுக்கிரகத்திற்காகநன்றிசெலுத்தி, வழமையிலேநெடுங்காலமெடுக்கும் திருப்பட்டவிசாரணை அவள்விஷயமாய்விரைவிலே முடிவடையத்தக்கதாகச் சகலரையும் பக்திவேகத்துடன் மன்ருடும்படி கேட்டு, அவளுடைய கல்லறைமுன் திரும்பவும் முழந்தாட்படியிட்டுச்செபஞ்செய்தார். அதன்மேல் அழகுறச் சட்டமிடப்பட்ட தாய்த் தமக்குஅன்பளிப்புச் செய்யப்பட்ட அல்போன்ஸாவின் படம்ஒன்றையும், அவள் பற்றிய சிலபிரசுரங்களையும் பெற்றுக்கொண்டார். பின்னர் சங்கனுச்சேரி மேற்றிராணியாருடன் கிளாரு கன்னிகா மடத்தையும், அதிலே அல்போன்ஸா கன்னியாஸ்திரீ வசித்திருந்த அறையையும் தரிசித்து, அந்த மடத்தின் சிரேஷ்டதாயார் உபகரித்த சிறிய ஞாபகசின்னத்தைப் பெற்றுத்திரும்பினர். அல்போன்ஸாவின் கல்லறைக் கோவிற்பலிபீடத்தில் கருதிஞல் ஒருவர் திவ்வியபூசை நிறைவேற்றியது இதுவே முதன்முறையாகும்.

## கம்யூனிஸ்த உடையிலே

சமீபத்திலே ஹெயின்றிச் எனும் நீராவிக்கப்பல் ஹொங்கோங் துறைமுகம் போய்ச் சேர்ந்தபோது அதிலிருந்து ஒருவர் கம்யூனிஸ்தஉடையுடன் இறங்கிக் கரைவந்துசேர்ந்தார். ஆனல், இவர் சீனக்கம்யூனிஸ்த தலைவனுன மாஓ ரிஸி-ரங் என்பவனின் ஆள்அல்ல. முன்னர் சீனவில் ஹோப்பே மாகாணத்தைச்சேர்ந்த சியென்சின்குரு மடத்தின் தலைவராயிருந்த யேசுசபையைச்சேர்ந்த வண. ஹென்றி றீயல் சுவாமியாரேயாம். இவர் சீனவிலே இரண்டுவருடகாலம் சிறைவாசமும், சீனவிலிருந்து நாடுகடத்தப்படுமுன் பதினைமாதகாலம் பலவந்தவேலையும் செய்திருக்கின்ருர். கம்யூனிஸ்தர்களின் கையிலிருந்து விடுபடுமுன் அவர்கள் இவருக்குத் தங்கள் கம்யூனிஸ்தஉடைகளைத் தரிப்பித்து அனுப்பிவிட்டார்கள்.

## மரியாயின் சேனை வேதசாட்சிகள்

சீனவிலே மரியாயின்சேனை அங்கத்தவர்களாய் ஏறக்குறைய ஆயிரம்பேர் வேதத்துக்காகத் தங்கள்பிராணனைத் தியாகஞ் செய்திருக்கிருர்களென்றும், பதினயிரம் அங்கத்தவர்கள்வரையிலே சிறைவைக்கப் பட்டிருக்கிருர்களென்றும் லண்டன்நகரில் நிகழ்ந்த மரியாயின்சேனை வெள்ளிவிழாச்சமாகமத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சீனவிலே இருந்துவந்த பாப்பரசரின் ஸ்தானிகர் அதில்பேசியபோது: "குருமார் எல்லோருமே சீனவிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் அங்கு மரியாயின்சேனை திருச்சபையைக் கொண்டுநடத்துமென்று நாம் பூரணநம்பிக்கை உடையவராயிருக்கிறோம்" எனக் கூறிநின்ருர். சேனையின் மத்தியசங்க உதவிக்காரியதரிசி பேசியவிடத்து: சீனவிலே மரியாயின்சேனை தனது தொண்டுகளை எவ்வாறு தொடக்கியதென்பதை விரித்துக்கூறி, அங்கே எப்போதும் அது கம்யூனிஸ்தர்களைக்காட்டிலும் முன்னணியில் நிற்கின்றதென்றும், தான் நிலைபெற்றுள்ள 25 வருடங்களிலும் மரியாயின்சேனை தனது தொண்டுகளை உலகமுழுவதிலும்பரக்கச்செய்திருக்கிறதென்றும் தெரிவித்தார். கம்யூனிஸ்த சீனவிலே மரியாயின்சேனை வேதசாட்சியத்துவ கிரீடத்தை எவ்வாறு ஈட்டிக்கொண்டதென்பது சமாகமத்திலே விரிவாக எடுத்துக் காட்டப்பட்டது.

## பாப்பரசரின் தங்கச்செபமாலை

ஒல்லாந்திலே ரெட்டர்டாம் நகருக்குச் சமீபமாக ஓர் புதிய கோவிலைக் கட்டியெழுப்ப நிதி சேகரிக்குமாறு நடத்தப்பட்ட அதிர்ஷ்டச்சீட்டில் முதல்வெகுமதியாகப் பரிசுத்தபாப்பரசர் ஓர் தங்கச்செபமாலை வழங்கியிருந்தார். சீட்டு இழுக்கப்பட்டபோது இந்தச்செபமாலை 70வயதுடைய ஓர் கிராமவாசிக்கு முதல்வெற்றியாகக் கிடைக்கலாயிற்று. இரண்டாம்வெகுமதியான 2,000பவுண் ஓர் அரசாங்க உத்தியோகஸ்தருக்குக் கிடைக்கலாயிற்று. ஒல்லாந்திலுள்ள கோவில்களிலெல்லாம் ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப்பின் விற்கப்பட்ட இந்த அதிர்ஷ்டச் சீட்டுகளாலே 50,000 பவுண் சேரலாயிற்று.

## பத்துலட்சம் செபமாலை

'போலியோ' என அறியப்படும் இளம்பிள்ளை வாதத்திலிருந்து நாட்டைப்பாதுகாப்பதற்காகக் கொஸ்ராறிக்காவின் குவாடலூப் விசாரணைப் பங்கைச்சேர்ந்த பெண்மணிகள் ஒன்றுசேர்ந்து பத்துலட்சம் செபமாலைசொல்லி ஒப்புக்கொடுப்பதாகப் பாத்திமாநாயகிக்கு வாக்குப்பண்ணியிருக்கிருர்கள். சென்ற சிலமாதங்களிலே இளம்பிள்ளைவாதம் கொஸ்ராறிக்கா நாட்டில் பயங்கரத்துக்குரியவிதமாகப் பரந்துகொண்டிருக்கின்றது. பத்துலட்சம் செபமாலையும் சொல்லிமுடிக்க அந்நாட்டு மக்கள் எல்லோருடையவும் ஒத்துழைப்பு வேண்டப்பட்டிருக்கிறது. அந்நாட்டில் வெளியாகும் பத்திரிகைகளும், வானெலிகளும் பரக்கப் பிரசாரஞ்செய்து இந்தச் செபமாலைப்படையணிக்குப் பெருந்துணைசெய்து வருகின்றன.

## வாக்குறுதியை நிறைவேற்றுகின்ருர்

அப்போது தம்மைப் பாப்பானவராகத் தெரிவுசெய்த கருதினல்மார் திருச்சங்கத்துக்குச் சமூகமளிக்குமாறு அர்ச். பத்தாம் பத்திநாதர் வெனிஸ்நகரிலிருந்து புறப்பட்டபோது, தம்மைப் பயணமனுப்பி வைக்கவென்று அங்கு றெயில்வேஸ்றேஷன் வந்து குழுமியிருந்த மக்கள் குழாங்களை நோக்கி: "உயிருடனே, அன்றேல் இறந்தபிறகோ நாம் உங்களிடம் திரும்ப வருவோம்" என்று கூறிப்போந்தார். இந்தவாக்குறுதி தற்போது நிறைவேறவிருக்கின்றது. எவ்வாறெனில், அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருமேனியானது வெனிஸ்நகர் கொண்டுசென்று அங்குள்ள அர்ச். மாற்குவின் ஆசனக்கோவிலிலே சிலநாள் தங்கியிருக்க விடப்படுமென்று பரிசுத்தபாப்பரசர் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவான கருதினல் ரொங்காலி ஆண்டவருக்கு உறுதிவாக் களித்திருக்கின்ருர். புதியஅர்ச்சியசிஷ்டரின் திருநாளாகிய ஆவணிமாசம் 20-ந் திகதியன்று அவர் திருமேனி அங்கு கொண்டுசெல்லப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## போர்வீரர்களின் திருயாத்திரை

பிரான்சிய தரைப்படை, கடற்படைகளின் வருடாந்த லூர்துபதித் திருயாத்திரை சமீபத்தில் நடைபெற்றபோது, அதிலே 25,000 போர்வீரர்களும், மாலுமிகளும் கலந்து கொண்டார்கள். பிரான்சிய ஆயுதபலங்களின் மேற்றிராணியாரான கருதினல் பெல்தின் ஆண்டவர் லூர்துபதிமகாலயத்தில் பாடற்பூசை நிறைவேற்றினர். லூர்துநகரின் தியோஸ் மேற்றிராணியார் மாலைஆராதனைநடத்தி ரோச்லைற் சுற்றுப்பிரகாரத்திலும் கலந்துகொண்டார்.

## நேர்த்திசெய்த திருயாத்திரை

பெல்ஜியதேச சாளிரோய்எனுமிடத்தில் லூயிஸ் ஜெல்னட் எனும் வாலிபசுரங்கத் தொழிலாளிஒருவர் இற்றைக்குப்பதின்மூன்றுவருடங்களின்முன் தான் வேலைசெய்த சுரங்கத்தில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்துக் காரணமாக 22 மணித்தியாலமாக நிலத்துள்புதையுண்டுகிடந்தார். இவருடன் அவ்வாறு புதையுண்ட 41 பேரிலும் மிக மோசமாகக் காயமடைந்த இவரும், மற்ருெருவரும்மாத்திரமே வெளியேற்றப்பட்டு உயிர்தப்பினர். தான்மீட்கப்பட்டு உயிர்பிழைத்தால் ஐரோப்பாவிலுள்ள பிரதான திருசேத்திரங்களுக்கெல்லாம் கால்நடையாக யாத்திரைசெய்வதாக இந்த வாலிப சுரங்கத்தொழிலாளி அந்தப் பிராணபாயமான வேளையிலே நேர்த்திசெய்து கொண்டார். அதன்பேரிலே தற்போதுஇவர் தனதுநேர்த்தியை நிறைவேற்றத் தொடங்கிச் சேத்திரம் சேத்திரமாகக் கால்நடையிலே சந்தித்துவருகின்ருர். சமீபத்திலே இவர் ரோமாபுரிக்குச் செல்லும்வழியில் புளோறென்ஸ் நகர்போய்ச் சேரலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

போதுக்கருத்து :— பாவச்சுமையின்கீழ் வருந்துவோர் யேசுவின் திரு இருதயத்தினிடம் இரக்கமும், இரட்சணியமும் தேடும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— கத்தோலிக்க உலகமுழுவதும் சிறுவில் வேதகலாபனையால்வருந்தும் திருச்சபையோடு தனக்குள்ள ஐக்கியத்தைத் தீரஉணரும்படியாய் மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
ஆனி மாதம் 24-ந் திகதி

# தமிழ்மக்களின் எதிர்காலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது இன்று தமிழுலகமெங்கும் கொடி கட்டிப் பறக்கும் ஓர் இனிய சுலோகமாகும். ஆனால், இந்தச்சுலோகம் தமிழ்மக்கள்—இலங்கைத் தமிழ்மக்கள்விஷயமாய் இன்று செல்லுமா? என்பது ஒருநல்ல கேள்வியாகும். ஆம், தமிழ்மக்கள் "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" என்பதை உணர்ந்து ஒன்றுபட்ட — ஒற்றுமைப்பட்ட ஓர் சாகியமாய் வாழுகின்றார்களா? இல்லையென்றே துணிந்துசொல்லலாம். அரசியல் விஷயமாகவோ, சமூக விஷயமாகவோ இன்று அவர்கள் என்றுமில்லாதவிதமாகப் பல்வேறுகட்சியினராக—பல்வேறு கொள்கையினராகத் தம்முளேபிளவுபட்டு —பின்னபேதப்பட்டு — தான் பிடித்தமுயலுக்குக் கால் மூன்றேயென்று வாளா பிணக்குப்பட்டுப் போரிகட்டிக்கொண்டிற்பதைக் கண்ணுறுங்கால், எதிர்காலத்திலே தமிழ்மக்களுக்கு உண்டுவாழ்வு என்றுசொல்ல எட்டுணையேனும் இடமுண்டா? இல்லையேல் அவர்கள்பாடு தாழ்வன்றி வேறுயாதாகும்?

தமிழ்க் காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி, லங்கா சமசமாசகட்சி, கம்யூனிஸ்தகட்சி, நவலங்கா சமசமாச கட்சி என்பனவாய் இலங்கையிலுள்ள எந்தக்கட்சியில்தான் தமிழ்மக்கள் இன்றுசேர்ந்தில்லை. சேர்ந்து, கண்டதே காட்சி, நின்றதேமாட்சி, கைக்கொண்டதே ஆட்சியென்று வீழ்ச்சியின்பாதையிலே சென்று கொண்டிருக்கும் போது, அவர்களுக்குமீட்சிஏது? மாட்சி ஏது? இத்தகைய பரிதாபகரமானநிலைமையிலே சிதறுண்ட ஓர்சாகியமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் தமிழ்ச்சாகியத்தை ஒற்றுமைபூண்டு விளங்கும் ஓர் தனிச் சாகியமாக்கவல்ல தலைவர்கள் இல்லையேயென்று—பெயரைச்சொல்லிப் பேதங்களை அகற்றிச் சகலரையும் ஒற்றுமையாய் வாழவைக்கக்கூடிய தமிழ்ப்பெரியார்கள் இல்லையேயென்று நாம்பலநாள் கவலைப்பட்டதுண்டு.

"மாபெரும் கூட்டம்!" எங்கே? யாழ்ப்பாண முற்றவெளியிலே. கொழும்பிலிருந்து ஒரு கோஷ்டியினர் வருவர். "மாபெரும் கூட்டம்!" எங்கே? முற்றவெளியிலே. மறு கோஷ்டியினர் வந்துதோற்றுவர். "மாபெரும் கூட்டம்!" எங்கே? அங்குதான் முற்றவெளியிலே. இன்னொரு கோஷ்டியினர்வந்து தலைகாட்டுவர். தலைவேறு, கால்வேறுபோன்று தம்முளே முரண்பட்ட பல்வேறுகொள்கைகளும், நாயும் பூனையும் போன்ற சகவாசமுமுடைய இந்தச் சமதர்ம தம்பிரான்களின் அக்கினிப்பொறிகக்கும் உக்கிர பேச்சுகளைக்கேட்கவென்று நம் தமிழ்மக்களும் அம்பாரமாக அள்ளுண்டுபோய்க் கூடிவிடுவார்கள். கொழும்பிலிருந்து எடுபட்டுவரும் அந்தப் பேச்சாளர்கள் யாதுகூறுவார்கள்? ஆளுங்கட்சியினராகிய அரசாங்க கட்சியினரிலே குறைபிடிப்பார்கள். குற்றஞ் சுமத்துவார்கள். தொண்டைகிழிய அவர்களைத் தூற்றுவார்கள். கண்டபடியெல்லாம் மக்களிடையே ஆத்திரமூட்டுவார்கள். பிறக்கின்றது குரோதம். அம்மட்டா! தமிழர்களிடையே தலைவர்களென இருப்பாரிலும் சாடுவார்கள். அவர்களுக்கும் சூடுபோடுவார்கள். அதனால் அவர்கள்மட்டிலே தமிழ்மக்களுக்குள்ள மதிப்புக்குறைந்து, வெறுப்புஎற்படுகின்றது. எழுகின்றது விரோதம். இவ்வாறாகப் பலவழியாலும் தமிழ்ச்சமூகத்தின் சமாதானத்துக்கும், ஐக்கியத்துக்கும் உலைவைக்கப்படுகின்றது.

இந்தநிலைமையிலே இலங்கைத்தமிழ்மக்களை ஒன்றுபடுத்தவும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதை உணர்த்தவும், தற்போது இருந்துவருகின்ற பலதிறப்பட்ட அரசியற்கட்சிகளையெல்லாம் ஒழித்துவிட்டு அவர்களிடையே ஓர்தனிப்பெருங் கட்சியை ஏற்படுத்தவுமாக நடந்துவரும்நன்முயற்சியை நாம் மனமுவந்து வரவேற்கின்றோம். இதுவிஷயமாய்ப் பாராளுமன்ற அங்கத்தவர்களாயுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் வருகிறஆடிமாத முதல்வாரத்திலே ஒன்றுகூடி, இலங்கையிலுள்ள சகல தமிழ் அரசியற்கட்சிகளினதும் மகாநாடுஒன்றைக் கூட்டுதற்கான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அறிகின்றோம். இந்த வேளை அரசியல்ஐக்கிய நலன்களைக்கோரித் தமிழர்களுக்கென்று அகில-இலங்கைத் தனி அரசியற்கட்சிஒன்றை அமைப்பது சாலவும் தகுதியானதே. தியாகமும், சகிப்புத்தன்மையும், உண்மைச் சாகிய அபிமானமும் இருந்தால் இதுகாரியம் வெற்றியளிக்குமென்பதில் எட்டுணையேனும் சந்தேகமேயில்லை.

### நன்றியறிந்த தோத்திரம்

நான் எடுத்த பரீட்சையில் நனிசித்தி அடையத் தயைபாலிக்க வேண்டுமென்று திரு இருதய நாதரையும், பரிசுத்த சதா சகாய மாதாவையும் மன்றாடிவந்தேன். என் மன்றாட்டுக்கு மனமிரங்கி நான் எடுத்த பரீட்சையில் நனிசித்தி அடையக் கிருபை செய்தார்கள். அவர்களுடைய நாமம் எங்கும் புகழப்படுவதாக.

J. Antony



# பல தேசங்களில்

## மலங்கோவுக்கு எதிராய் குருஷே

மஸ்கோவில் பேறியாவோடு அரசியல் ஆள்வேட்டைப்படலம் முற்றுப்பெற்றுவிடவில்லை. இன்னும் எவ்வளவோ பெரியதலைகள் உருளப் போகின்றன என்று கருதுவதற்கு ஆதாரமிருக்கிறது. தற்போது மலங்கோவ்ஆட்சி ஆட்டம்கண்டு வருகிறது. அவருக்குப் போட்டியாகக் குருஷே முளைத்திருக்கிறார்.

இந்தக்குருஷே யார்? அவர்எப்படி உள்ளுக்குள்குடைந்து வேலைசெய்கிறார் என்றவிவரங்களை 'நியூயோக் ஹெறல்டு ரிறிபியூன்' பத்திரிகையின் வாஷிங்ரன தலைமை நிருபரான ரூஸ்கோ டிறம்மண்ட் திரட்டித்தருகிறார். அவர்கூறுவது வருமாறு:

"குருஷே தலைமைப் பீடத்தின் மேல் கணைவைத்திருக்கிறார். மலங்கோவை அப்புறப்படுத்த அவர் அசாதாரணவேகத்தில நடவடிக்கை எடுத்துவருகிறார். குருஷேதான் கம்யூனிஸ்த கட்சியின்காரியதரிசி. காரியதரிசிபதவியே ஆள்ஒழிப்புக்கு இணையற்ற அரசியல்ஆயுதம். இந்தஆயுதத்தை உபயோகித்து ஸ்ராலின் சர்வாதிகாரியானார். குருஷே தற்போது இந்தவசசிராயுதத்தின் வலிமையைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்.

தற்போதைக்கு மலங்கோவ் - குருஷே புகைச்சல் வெளிப்படையாகப் பார்த்தால் தெரியாது. ஆனால், இதெல்லாம் 'அமுக்கமாக' நடக்குமேதவிர, வெளிப்படையாகத் தெரியக்கூடிய விஷயம்அல்ல. பேறியாவுக்கு நேரிட்ட கதி ஒருவருடத்துக்குமுந்தியேவெளிப்படையாகத் தெரிந்ததா? இல்லை. பேறியாஒருநாள் கைதுசெய்யப்பட்டு, விசாரணைஎன்ற நாடகத்துக்குப்பிறகு தூக்கிலிடப்பட்டார். மஸ்கோநடப்புக்கள் இந்தரகத்தைச் சேர்ந்தவை. சர்வாதிகார வெறிபிடித்தோர் கையில் அதிகாரம்இருந்தால், அது எந்தநேரத்தில் யார்தலைக்கு ஆபத்தோ? ஆபத்து உண்டு என்பதுமாத்திரம் நிச்சயம்.

சமீபகாலமாகச் சோவியற் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் குருஷே தாக்கிப்பேசிவருகிறார். முதலிற்சோவியற் கமத்தொழிற்பகுதிமீது அவர் பாய்ந்தார். பிறகுகமத்தொழில் மந்திரிமீது நேரடியாக வசைஅம்புகளைத் தொடுத்தார். கமத்தொழில் மந்திரி ஐவன்பெனிடிக்ரோ மலங்கோவினால் நியமிக்கப்பட்டவர். இவர் மலங்கோவுக்குப் பொறுப்பாளி.

சோவியற்இராணுவச் செய்தித்தாளான 'ட்ரூட்' ஒருசெய்தியைவெளியிட்டது. அதாவது "இராணுவ காரியங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பு" குருஷேயிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை அறிவித்தது. 'ட்ரூட்' கூறியதுபெரிய சமாச்சாரம்அல்ல. அது கூறாமல்விட்டதுதான் பெரியசமாச்சாரம். அதாவது: சோவியற்ரூஷியாவில் தற்காப்புக் கமிற்றிஎன ஒன்றிருக்கிறது. இராணுவத்தை மேற்பார்வைசெய்யும் அதிகாரம் அதற்கேஉண்டு. கமிற்றியின் தலைவர் மலங்கோவ்.

குருஷேயின் அறுபதாவது பிறந்தநாளன்று, ஒன்பது அயல்நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்தகட்சிகள் அனுப்பிய வாழ்த்துரைகளைச் சோவியற்பத்திரிகைகள் தடபுடலாகவெளியிட்டன. ஸ்ராலின்காலமானபிறகு இப்படி ஒருசோவியற்தலைவர் ஏற்றித் தொழப்பட்டது [illegible]

குருஷே தனதுசொந்தப்பொறுப்பில் கேந்திரமானபதவிகளிலே தனக்கு விசுவாசமான புள்ளிகளை அமர்த்தியிருக்கிறார். மஸ்கோவில் போட்டியும் பொறாமையும் மீண்டும் கிழம்பியிருக்கின்றன. ஸ்ராலினுக்குப்பிறகு நடந்த பதவிவேட்டையும், ஆளொழிப்பும் இன்னும் முடிந்துவிடவில்லை. பேறியாவைப்போல இன்னும் பலபெரியதலைகள் உருளும். அதற்குப்பிறகு கொஞ்சக்காலத்துக்கு இரத்தவெள்ளம்சற்றே வடிந்திருக்கும்.

## பிரான்சின் புதிய பிரதமர்

பிரான்சிலே எம். லனியேல் அவர்களைப் பிரதமராகக் கொண்டிருந்த மந்திரிசபை இந்தோ சீன விஷயமாகக் கையாண்டுவந்த முறைகளைப் பிரான்சியபாராளுமன்றம் ஆதரியாததால் அம்மந்திரிசபை இராசினாமாச் செய்துவிட்டது. தற்போது எம். பியேர் மென்டெஸ்-பிரான்ஸ் என்பார் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் நியமனம்பெற்ற இருபத்தோராவது பிரான்சிய பிரதமராவர். இவர் யுத்தகாலத்திலே வெடிகுண்டுவிமானங்களின் விமானியாகச் சேவைசெய்தவர். இந்தோசீனவிஷயத்தில் அமெரிக்காதலையிடுவதை அறவே எதிர்ப்பவர் ஐரோப்பிய சேனையை ஆக்குவதிலே அதிகஞ் சார்புடையவர். கம்யூனிஸ்தர்களின் வாக்குகள் இல்லாமலே பிரான்சிய பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஆதரவை இவர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஓர் அதிசய கடிகாரம்

திருவாங்கூரிலே குய்லன் அதாவது கொல்லம் மற்றிராசனத்தைச்சேர்ந்த 22 வயதுடையவரான பிரான்சீஸ் பெர்னண்டெஸ்எனும் கத்தோலிக்கவாலிபர் அதிசயகடிகாரம்ஒன்றைச் செய்திருக்கிறார். இஃது உலகநேரத்தைக் காட்டுவதாகும். பூகோளவடிவமாகச் செய்யப்பட்டுள்ள இந்தக்கடிகாரம் தனதுஒரேமுகத்தில்தானே 36 தேசங்களின்நேரத்தை ஏககாலத்திற் காட்டுகின்றது. ஆறுஅடிக்குமேல்நீளமுடைய இக்கடிகாரம் 49 ஊசிகளைக் கொண்டிருக்கிறது. இதனைச்செய்துமுடிக்க அவருக்குப் பத்துமாதம்பிடித்தது. இதற்குமுன் அவர் பொது வானசாஸ்திர கடிகாரம்ஒன்றைச் செய்திருக்கின்றார்.

## பெயர்மாறிய ரூஷியா

அக்காலமுதல் ரூஷியாவின் தலைப்பட்டணம் சென்பீற்றேர்ஸ்பேர்க் நகரென அழைக்கப்பட்டுவந்தது. ஆனால்; முதலாவது உலகயுத்தம் நடந்தகாலத்திலே அதன்பெயர் பீற்றோகிறாட்என மாற்றப்பட்டது. "பேர்க்" எனும் சொல் ஜேர்மன்பாஷையுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் அந்தயுத்தத்திலே ஜேர்மனியைஎதிர்த்து நேசநாடுகளுடன் சேர்ந்து போர்புரிந்துவந்த ரூஷிய அரசாங்கம் "பேர்க்" என்பதைநீக்கிவிட்டு அதனிடமாகக் "கிறாட்" என வைத்துக்கொண்டது. பிந்த ரூஷியாவிலே கம்யூனிஸ்தர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டபோது, பீற்றர்என்பது ஓர்ரூஷியசக்கரவர்த்தியின் பெயராகையால் அதனைஒழித்துவிட்டுச் சோவியற் பொதுவுடமைஅரசின் ஸ்தாபகனை லெனினின் பெயரையிட்டு லெனின் கிறாட்என்று நாமஞ்சூட்டினர். பிறகு ரூஷியதலைநகரையும் மஸ்கோவுக்கு மாற்றிவிட்டார்கள். அடுத்தபடியாக லெனின்கிறாட்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரியாயின்

புனித வருட முடிவு விழாக்

# கொண்டாட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் மரியாயின் புனிதவருடத்தை முன்னிட்டு நடைபெறும் விழாக் கொண்டாட்டங்கள் ஞானோபதேசப் பொருட்காட்சியோடும், மரியாயின் சமாகமத்தோடும் சிறப்பாக முடிவாகும்

ஐப்பசிமாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை காட்சி திறந்துவைக்கப்பட்டு மூன்றுநாட்களாக நடைபெறும்.

யாழ்ப்பாணமேற்றிராசனத்துள்ள எல்லாக் கத்தோலிக்கபாடசாலைகளும் இவ்வைபவங்களிற் கலந்துகொள்ளும்.

கத்தோலிக்க சித்திரக் கலைவல்லோரிடமிருந்து காட்சிக்குவைப்பதற்கு ஓவியங்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

காட்சியில முதலிடம் பெறுவோருக்குப் பரிசில்களும், தகுதிப் பத்திரங்களும் வழங்கப்படும்.

ஐப்பசித்திங்கள் 10-ம் நாள் ஞாயிறுவாரம் மரியாயின் சமாகமம் நிறைவாகும்.

சம்பத்திரிசியார் கல்லூரிமைதானத்தில் இவ்வைபவங்கள் நடந்தேறும்.

Very Rev. Fr. S. Lucas, O.M.I., Visitor of the Vicariate of Ceylon requests the prayers of all for the repose of the soul of his brother who died in Madrid on the 13th June.


## AMATEUR PHOTOGRAPHERS

A colour transparency is not more difficult to take than any other photograph. And by taking ANSCO COLOR Film you do not have to wait months to see the results.

ANSCO COLOR Film Size 120

*Available in Jaffna at*

**St. Joseph's Catholic Press.**


## சற்பிரசாதத்திருநாள்

### காவலூர்

20-6-54 ஞாயிறுவாரம் திவ்விய சற்பிரசாதநாதரின் திருநாளையிட்டுக் கோடியற்புதரின் ஆலயம் சிறந்தகாட்சி அளித்துநிற்க, காலை பாடற்பூசை நிறைவேறியது. பக்தர்கள் பலநூறுகப் பரலோகமன்னாவை அருந்தினர். பிற்பகல் அதிவண. ஜே. நிக்கலஸ்சுவாமியவர்கள் சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தைத் தாங்கிச்செல்ல, வண. ஜோண் மேரி, வண. எஸ். டெவிற்எனும்குருமார் இருவரும் தியாக்கோன், உபதியாக்கோனுகஉதவிச்செல்ல, காவலூர்க் கட்டளைக்குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ், யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதாகோவில் கட்டளைக்குரவர் வண. பி. டபிள்யு. யேசுதாசன், காம்பன் கட்டளைக்குரவர் வண. ஜே. வேதநாயகம், அர்ச். அந்தோனியார் கல்லூரிஅதிபர் வண. பி. ஜே. ஜீவரத்தினம் எனும் குருப்பிரசாதிகள் முன்செல்ல, திவ்வியநற்கருணைநாதர் பவனி செல்லலானார். மக்கள் அவரை வாழ்த்தித்துதித்து, இனியகீதங்கள்படித்து, மேரைமரியாதையாய் அணிவகுத்துச் சென்றனர். வீதிகள் துவசதோரணங்களால் சிங்காரிக்கப்பட்டுத் தேசோமயமாய்த் துலங்கின. முறையே அர்ச். தேவமாதாவின் கோவிலிலும், சந்தியோகுமையோர்கோவிலிலும், அர்ச். சூசையப்பர்கோவிலிலும் திவ்விய சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பெற்று, ஈற்றில் அர்ச். அந்தோனியார்கோவிலில் அருளப்பெற்ற கடைசி ஆசீர்வாதத்தோடு திருநாள்இனிதே முடிவாயிற்று.

— நிருபர்

## அர்ச். செபஸ்தியார் திருநாள்

### புல்லாவெளி

நோவனைகள் கொண்டாட விரும்புகிறவர்கள் தயவுசெய்து கட்டளைக்குருவருக்கு எழுதிக்கொள்வார்களாக.

கட்டளைச் சுவாமியார்,
செம்பியன்பற்று, P. O.

## யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி

கம்பகா உதவிமஜிஸ்றேற் திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் யாழ்ப்பாணத் தற்காலிக டிஸ்திறிக் நீதிபதியாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். திரு. எஸ். தனபாலசிங்கம் அவர்கள் கம்பகா உதவிடிஸ்திறிக் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## தவறாக அருந்திய மருந்து

கட்டுவன்வாசியான சுப்பிரமணியம் என்பவரின் புதல்வியான புஷ்பம் என்னும் 22 வயதுள்ளபெண் சென்றபுதன் கிழமைமாலை தோடம்பழச் சாறென நினைந்து வெங்காயப்பூச்சிகளை அழிக்கும் நச்சுத்திராவகம் இருந்த போத்தலை எடுத்து அதற்குள் இருந்த திராவகத்தை அருந்தியதாகவும், பின்னர் தவறை உணர்ந்த வீட்டார் அப்பெண்ணைச் சிகிச்சைக்காகக் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்வழியில் அவள் இறந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். றீத்தம்பாள் இவர்களது மன்றாட்டாலும் என்மனைவி சுகமே ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்ததற்காகவும், இன்னும் நான் கேட்டுவந்த மன்றாட்டுகள் அனுகூலமானதற்காகவும் என் மனமார்ந்த நன்றி.

Colombo M. Fernando

# தெய்வீக விருந்து



'யுவன்' காம்பொன்

கட்டளைக் கலித்துறை

I

பாசப் பெருக்கால் மனுவாகி ஆவி பலிகொடுத்து
நீசப் பவத்தின் தளைநீக்கி மோட்ச நெறிதிறந்து
தாசர் மனத்தே மனுவாய் அமரத் தயைபுரிந்த
நேசர் இருக்கப் பிறிதென்ன வேண்டுமெம நெஞ்சினுக்கே

II

மாயும் உடலை வளர்ப்ப உலையோம் மறமிகுத்தால்
வீயும் எழிலான்மம் வீழ நரகினில் விட்டுவிடோம்
தாயும் கொடுக்கா இதவாழ்வுப மேலாம் தயைவரமும்
ஈயும் இறையைப் பெறுவோம நிதமும் இருதயத்தே

II:

நீல விழிநீரில் பாதங் கழுவி நிலந்தொடுநீள்
கோலக் கருங்கூந்தற் பட்டால் துடைத்த கொடும்பவத்தாள்
சீலம் அடைந்திடச் செய்திட்ட அர்த்தத் திருவருளோன்
தாலத் தெமக்கும் உணவாதல் விஞ்சுந் தயைப்பெருக்கே

IV

மருந்தும் அவராகி மாறாப் பிணிக்கே மனதுவக்கும்
விருந்தும் அவராகி மீட்சி அடைய விரும்புபவர்
அருந்தும் படியாய் அமலன் இருப்ப அதைமறந்தால்
பொருந்தும் பெருவாழ்வு பொன்றில் அகன்றற்றுப் போய் விடுமே

V

சங்கம் வளர்த்த தமிழ்போற் பரந்தே தமதுதிரம்
எங்கும் செறிய எமதன்பில இன்னலை ஏந்தினவர்
தங்கும் இடமாக எங்கள் உளத்தினைத் தாம்தெரிபில்
பொங்கும் அருள்வாழ்வு வேறென்ன எங்கட்குப் பூதலத்தே

## மாதோட்டத் தபால்

### (நாட்டுத்தூதன்)

ஐயா! தூதன் சிலகாலமாகப் "பாதகாவல"னில் தலைகாட்டாததையிட்டு எவருமே ஏதும் குறைவிளங்கப்படாதாம். தெரிந்தோ, தெரியாமலோ எதையுமே நினைத்துவிடக் கூடாதாம். ஆம், இந்த ஆழிசூழுலகில் எவ்வுயிர்க்குமே சுகமும் துக்கமும், இன்பமும் துன்பமும் சுழன்று சுழன்றுவருவது வழமைதானும். ஆனால், என்னதான் நேர்ந்தபோதிலும் தூதன் பாதுகாவலனில் தோன்றுதிருக்கவே மாட்டானும். நிற்க, இங்குள்ள சில்லறை ஆபிசுகளிலே கடமைஆற்றி வருகின்ற சிலகுட்டி உத்தியோகஸ்தர்கள் கையாண்டுவரும் சர்வாதிகாரமுறையோ வரவரப் பலமடங்காக அதிகரித்து, சிலவேளைகளிலே கிராமவாசிகளில் தங்கள் கைவரிசையைத்தானும் காட்டஎத்தனித்து, ஊரிலே ஒற்றுமையைக் குலைத்து, சச்சரவுகளை உண்டுபண்ணிக்கொண்டு வருவதைக் கண்ணுறுந்தோறும் நெஞ்சம்புண்ணுய்வருந்துகின்றதாம். என்ன ஐயா! நமது லங்காதுவீபம் சுதந்திரம் பெற்றபின்னருமா இந்தமாதிரியான அடிமை ஆட்சிமுறை—விசேஷமாகக் கிராமங்களில் நிலைபெற்று நீடித்திருக்க வேண்டும்? இன்று எக்கருமத்தைத்தான் உற்றுநோக்கினாலும் வெறும் சிலுசிலுப்பேஅல்லாது பலகாரம் மருந்துக்குமே காணப்படுவதாயில்லையாம். சீரியநல்ஒழுக்கமும், நற்குணங்களும் இல்லாது உத்தியோகப்பெருமையும், பணமமதையும் கொண்டுவாழும் இந்த வாழ்வு நாட்டினை நன்குமுன்னேற்றமடையச் செய்யுமாஎன்றுதான் தூதன் கேட்கின்றானும்.

**தீச்செயல் பெருக்கம்:** ஓர்காலம் அறவாழ்வும், அமைதியும் குடிகொண்டிருந்த இப்பகுதியிலே நாளுக்குநாள் அக்கிரமச்செயல்கள் அதிகமாகத் தோன்றி அநேகரின் உயிருக்கும், நல்வாழ்வுக்கும் உலைவைத்துக் கொண்டு வருவதைச் சிந்திக்குந்தோறும் பயப்பிராந்தியே உண்டாகின்றது. இவற்றிற்கெல்லாம் முக்கியகாரணம், பொதுமக்களின் ஒற்றுமைக்குறைவும், நகரகாவலர் சிலரின் பாராகண்டிதமான போக்குமேயென்றுதான் பேசிக்கொள்ளுகின்றனராம். சிலர்பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் போல் பாசாங்காக நடந்து கொள்ளுகின்றார்கள். எல்லாநீதியும் பணமென்னும் அரணுக்குள்ளேயே கட்டுப்பட்டு விடுகின்றதாம்.

**நெல்லின் நிலைமை:** இம்முறை பெரும்போக நெல்விளைவு திருப்திகரமாய் இருந்தபடியாலும், இருட்டுச் சந்தையிலே நெல்லின்விலை குறைந்தபடியாலும் ஏராளமானநெல் ஐக்கிய சங்கநிலையங்களை நாடிச் சரிந்தபடியிருக்கின்றதாம. இவ்விதம் அரசினர் நெல்விலைக்கு நல்மதிப்புக் கொடுத்திருப்பது, நெல்வேளாண்மையை விருத்தி செய்வதில் உழவர்களுக்கு மிகுந்த உற்சாக மூட்டுகின்றதாம்.

**தேர்தல் செய்திகள்:** இங்கு மாந்தைதெற்கு, வடக்குப்பகுதிகள் தவிர, ஏனையபகுதிகளிலெல்லாம் கிராமச்சங்க தேர்தல்கள் நடைபெறுகின்றன. இவற்றிலே வங்காலையில் நடைபெற்ற தேர்தல்தான் இப்பகுதிமக்கள் சகலரினதும் கவனத்தை ஈர்த்துகொண்டது. பாராளுமன்ற தேர்தலின்போதுதானும் நடைபெற்றிராத கைகலப்பு அங்கு நடைபெற்றது. இதற்குக் காரணம், இருபெரிய கட்சிப்பிரிவுகள்உண்டாய் ஊர் இரண்டுபட்டிருப்பதென்றே கதைத்துக் கொள்ளுகிறார்கள். ஒரே பெரும் சாதியத்தைக்கொண்ட இக்கிராமத்தில் இவ்விதபிளவு ஏற்பட்டமையையிட்டு எவருமே வருந்தாமலிருக்கமுடியாது. அறிவு வளரவளர, அன்பும் ஐக்கியமும் வளர்ந்துகொண்டுவரவேண்டும். "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்"

**தற்கொலைகள்:** மாதோட்டப் பகுதியிலே சென்றவாரத்தில் கவலைக்கிடமான இருதற்கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. 16-6-54 புதன் கிழமை 9-ம் கட்டையில் வசித்துவந்த 19 வயதுள்ள சின்னம்மாஎனும் இளம் பெண் கழுத்தில் சுருக்கிட்டும், புதுக்கமம் என்னுங் கிராமத்தில் வசித்துவந்த அருளம்மாஎனும் 20 வயதுப் பெண் கிணற்றுள் விழுந்தும் தற்கொலை செய்துகொண்டார்கள்எனத் தெரியவருகின்றது. இளம் வனிதையர்கள் இப்பகுதியிலே தற்கொலை செய்யத் தொடங்கியிருக்கும் புதுமையானது காடு நடக்கக் கண்ட புதினமாகவே தூதனுக்குத் தோன்றுகிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அடுத்த வெள்ளிக் கிழமை திருஇருதயத் திருநாள். இந்தத் திருநாளை ஏற்படுத்திக் கொண்டாடும் படி திவ்விய யேசு தாமே கேட்டுக் கொண்டார்.

தமது அன்பை மனிதர் புறக்கணிக்கிறார்கள் என்றும், நேசத்திற்குப் பதில் அவமானம் உண்டு பண்ணுகிறார்கள் என்றும், தமக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய ஒருவனைத் தேடியும் காணவில்லையே என்றும் யேசு முறைப்படுகிறார்.

சீன தேசத்தி லிருந்து நாடு கடத்தப் பட்ட ஓர் அமெரிக்க கன்னியாஸ்திரி சொன்னாள்: "சீனாவிலே மறியலில் அனுபவித்த உபாதையை விட, இப்பொழுது நற்சுகதேகியாக எனது மடத்தின் அமைதியில் இருப்பதே அதிக உபாதையாகின்றது; துன்பத்தை அனுபவிக்க முடியா திருப்பதே அதிக துன்பமாகின்றது" என்று.

இந்த உணர்ச்சி உங்களுக்கும் உண்டா? யேசுவின் நேசத்திற்காகத் துன்பப் பட—ஒறுத்தல், சுயமறுப்பினால் நேசத்தைக் காட்ட உங்களுக்குத் தருணங்கள் உண்டு. நேச யேசு அதை மிகவும் விரும்புகிறார்.

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## மாலைக் கடற்கரையில்....



'ஜெயம்'

1

நீல நிறக்கடல் நீந்திடும் பொன்னலை
நெஞ்சை மயக்கிடும் வெண்மணற் குன்றுகள்
மாலை மினுக்கிடும் அந்தியின் மின்னொளி
மாண்பு கவர்ந்திட ஆழ்ந்து கிடந்தனன்

2

வானக் கடலிலும் தண்ணலை போற்பல
வன்னப் பறவைகள் வந்தன போயின
தேனைப் பொழிந்தன இன்னிசைப் பாகங்களில்
தீஞ்சுவைக் காவியம் வாங்கிப் படித்தனன்

3

ஓடி யொழிந்தனள் உள்ளங் குளிர்ந்திட
ஓர்முறை மேனியில் வந்து விழுந்தனள்
பாடி மறைந்தனள் தென்றல் என்பதகிரி
பாக்கியம் செய்தவன் இன்பம் பருகினேன்

4

சின்னஞ் சிறுமியர் வந்தனர் கூடினர்
செந்தமிழ் சிந்திட அன்புரை யாடினர்
அன்னம் சமைத்தனர் சிற்றில்கள் ஆக்கினர்
ஆயிரம் சிப்பிகள் சேர்த்தனர் சென்றனர்

5

தங்கம் சொரிந்திடும் பந்துறள் சூரியன்
தாழ்ந்தது தாழ்ந்தது மேற்றிசை தாழ்ந்தது
எங்கணும் செந்நிறம் சூழ்ந்தது சூழ்ந்தது
இரத்தினப் பாயலைப் போன்றது புல்வெளி

6

காரிரு ளாம்திரை வந்து கவிந்தது
காட்சிகள் பூமிசை மங்கி மறைந்தன
ஆரிதைப் போலுயிர் ஓவியம் காட்டுவர்
அற்புதன் விந்தைகள் கூறவும் ஆகுமோ?

## வழி தவறிய ஆடு

ஒரு இடையனிடம் நூறு ஆடுகள் இருந்தன. அவைகளை அவன் மேய்ச்சலுக்குக் கொண்டு போவான். அப்படிப் போனபொழுது ஒருநாள் ஒரு ஆட்டுக்குட்டி வழிதவறி மந்தையை விட்டு அலைந்தது.

அதை அறிந்த இடையன் மற்ற ஆடுகளை விட்டிட்டு வழிதவறிய ஆட்டைத் தேடிப்போனான். வெகு தூரத்தில் அது பற்றைகளுக்குள் சிக்குண்டு இருக்கக் கண்டான். அதைக் கைப்பற்றிக் கொண்டதும், அதனைத் தோளிற் சுமந்து கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான். செய்தியை அயலவர்க்குச் சொன்னான். "என்னுடன் சந்தோஷங் கொள்ளுங்கள்; ஏனெனில், காணாமற் போன ஆட்டைக் கண்டு கொண்டேன்."

இது யேசுசொன்ன உவமை. அதற்குக் கருத்தும அவர்தாமே சொன்னார். "தொண்ணூற் றொன்பது பேர் தவஞ் செய்வதிலும் பார்க்க, ஒருபாவி மனந் திரும்புவதை யிட்டு மோட்சத்தில் அதிக சந்தோஷம் இருக்கும்" என்றார்.

மேற்கூறிய உவமையைப் போல இன்னும் ஒன்று கூறினார். ஒரு மனுஷியின் தாலியில் கோத்திருந்த பவுண் காசு விழுந்து விட்டது. வீடு முழுவதும் தேடிப் பார்த்தாள். விளக்கைக் கொளுத்தி ஒவ்வொரு மூலையிலும் பார்த்தாள். வீட்டைப் பெருக்கினாள் தேடுவதற்காக. கடைசியாய்க் கண்டு பிடித்தாள். தன் தோழிமாருடன் சொல்லிச் சந்தோஷப் பட்டாள். இந்த உவமையின் கருத்தும் மேற் கூறிய வாறு.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## கோமாளியும் கழுதையும்

பல வருடங்களின் முன் ஒரு இராசாவின் அரண்மனையில் அன்ரோனியோ என்னும் ஒரு கோமாளி வசித்து வந்தான். தன்னைக் காண்பவர்கள் எல்லாரும் வயிறு குலுங்கச் சிரிக்கக் கூடிய வேலைகளை அவன் செய்துவருவான். அந்தப் பெரிய மாளிகையில் அவனுக்கு ஒரேஒரு சிநேகிதன் இருந்தான்.

அந்தச் சிநேகிதன் யாரெனில், 'மறியோ' என்னும் பெயருடைய ஒரு சின்னக் கழுதை. அவன் அந்தக் கழுதையை அதிகம் நேசித்தான். ஒவ்வொரு நாளும் அதைத் துடைத்துக் கழுவி, உணவூட்டி மிகவும் பட்சத்தோடு பாமரித்து வந்தான். இவ்வாறு இருக்கையில் ஒருமுறை அந்த நாட்டில் நெடுநாள் மழை பெய்யாததால் குளங்கள் எல்லாம் வற்றிவரண்டு போயின. அதனால் விளைச்சல்நிலங்களும் காய, தானியங்கள் எல்லாம் பதராகிப் பாழாய்விட்டன. அந்நாட்டு மக்கள் குடிக்கத் தானும் நீரின்றி மிகவும் கஷ்டப் பட்டார்கள்.

ஒருநாள் அரசன் அன்ரோனியோவை அழைத்து: "உன்னுடைய சிநேகிதனை இனி இங்கே வைத்திருக்க முடியாது; நாங்கள் தண்ணீர் இல்லாமற் கஷ்டப்படும் பொழுது, மிருகங்களுக்கும் தண்ணீர் கொடுக்க முடியுமா? உடனே உன் சிநேகிதனை மறியோவை வெளியே துரத்திவிடு" என்றான். அவனுக்கு இருந்த துக்கமோ சொல்லமுடியாது. நாளுக்கு நாள் தண்ணீர்ப் பஞ்சமும் கூடிக்கொண்டே வந்தது.

ஒருநாள் இரவு அவன் தாகத்துடன் தனது படுக்கையில் நித்திரை செய்து கொண்டு இருக்கையில் யன்னல் அண்டை தன் சிநேகிதனின் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். நிலவு வெளிச்சத்தில் சிநேகிதனைக் கண்டதும் ஓடிப்போய்க் கதவைத் திறந்தான்.

ஓ, மறியோ! என்று கதறிக் கொண்டே சிநேகிதனைக் கட்டித் தழுவினான். "நாங்கள் இருவரும் ஒருமிக்க இங்கே இருக்க முடியாது; உன்னை விட்டுத் தனியே இங்கு வசிக்கவும் என்னால் முடியாது; வா, இருவரும் வெளியே புறப்படுவோம்" என்றான். ஏறினான் சிநேகிதனின் முதுகில். இருவரும் பட்டணத் தெருக்களைக் கடந்து சென்றனர். இந்தக் காட்சியைச் சனங்கள் யன்னல் வழியாகக் கண்டு கைதட்டிச் சிரித்து அவனைக் கேலிபண்ணினார்கள். இருவரும் பட்டணத்தை விட்டு அதிக தூரம் போய்விட்டனர். அன்ரோனியோவுக்கு முன் பெரிய குளம் ஒன்று காணப் பட்டது. அவனுக்கு உண்டான ஆனந்தமோ சொல்ல முடியாது.

"மறியோ! இங்கே ஒருபெரிய குளம் இருக்கிறது; எல்லாருக்கும் தேவையான நீர் இங்கு கிடைக்கும்; வா, திரும்பிப் போய் இதை இராசாவுக்கு அறிவிப்போம்." உடனே மறியோ திரும்பி வந்தவழியே ஓடத் தொடங்கிற்று. அரண்மனையை அடைந்தனர். அன்ரோனியோ அரசனுக்கு இச்சந்தோஷ செய்தியைத் தெரிவித்தான்.

உடனே அரசன் ஊழியரை அந்தக் குளத்துக்கு அனுப்பி நகரவாசிகளுக்கு வேண்டியளவு நீரைப் பீப்பாக்கள், குழாய்கள் மூலம் தருவித்தான். இதை அறிந்த மக்கள் அன்ரோனியோவையும், சிநேகிதனையும் புகழ்ந்து கொண்டாடியதுடன் அவர்கள் இருவருக்கும் அலங்காரமான மாளிகையும் அமைத்துக் கொடுத்தார்கள். அன்று முதல் எவருமே இவர்களைப் பார்த்துச் சிரிப்பதில்லை உண்மைச் சிநேகிதத்தைப் பார்த்தீர்களா?

— எம். ஜெயம்

## கண்டுபிடியுங்கள்

மூன்று சொற்களால் ஆகிய ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தின் எழுத்துகளை இடம் மாறி வைத்தால்

"செம்புகத் தடி பாயாது" என மாறுபட்டு நிற்கும். உங்களில் எவராவது இந்த எழுத்துகளை முறைப்படி மாற்றி நிரைத்து அந்த வாக்கியத்தைக் கண்டு பிடித்து, காவலனின் அடுத்த வாரப் பதிப்பில் வெளியிடுங்கள் பார்க்கலாம். உங்களால் முடியாவிட்டால், உங்கள் அன்புள்ள அண்ணா மறுவாரப் பதிப்பில் அதை உங்களுக்கு வெளியிடுவார். சுபம்!

சகரசகாரன்.

### சென்ற இதழில் வெளியான பழக்கணக்கின் சரியான விடை:

(1) 1. நாயகம் சந்தையில் ஒன்று ஒருசதப் படி 70 பழங்களை 70 சதத்திற்கு விற்றான்.
2. துரை சந்தையில் 40 பழங்களை 40 சதத்திற்கு விற்றான்.
3. இராசா சந்தையில் 10 பழங்களைப் 10 சதத்திற்கு விற்றான்.

(2) 1. நாயகம் மீதியான 5 பழங்களையும் வழியிலே ஒன்று 6 சதப் படி 30 சதத்திற்கு விற்றான்.
2. துரை வழியில் 10 பழங்களை 60 சதத்திற்கு விற்றான்.
3. இராசா வழியில் 15 பழங்களை 90 சதத்திற்கு விற்றான்.

நாயகம்: 70 + 30 சதம் = 1 ரூபாவுக்கு விற்றான்.
துரை: 40 + 60 சதம் = 1 ரூபாவுக்கு விற்றான்.
இராசா: 10 + 90 சதம் = 1 ரூபாவுக்கு விற்றான்.

இராசதுரை
சில்லாலை — தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுசெப்பெ சார்த்தோவின் முதற் சுவிஷேதொண்டு



பெப்போ குருப்பட்டம்பெற்றபின் தமது வீட்டாருடன் தங்கிச் சொற்ப கால ஓய்வு எடுக்கும்படி உத்தரவு பெற்றிருந்தார். அதன்பின் புதிய குருவான அவருக்கு வேலை கிடைத்தது. மலைச்சாரலில் இருந்த தோம்பொலோ பங்கிற்கு உதவிக்குருவாக நியமிக்கப் பட்டார்.

அவ்வூரவர்கள் மந்தைகளை மேய்க்கும் இடையர். புஷ்டி யுடையவர்கள். கொடும் பேச்சினர். தொன் யுசெப்பெயின் போக்கு அவர்களுக்கு மிகவும் பிடிப்பு. விசேஷமாகச் சிறுவர் சிறுமியர் அவரை அதிகம் நேசிப்பார்கள். பூசை, ஆராதனை வேளைகளுக்குரிய சங்கீதங் கற்றுக் கொடுத்த படியால் அவரிலே அவர்கள் மிகவும் பட்சங் கொண்டார்கள். அவர்கள் படிக்கும் பிழையான முறைகளைப் பழிப்பாகப் படித்துக் காட்டும் பொழுது விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அடுத்த நிமிஷம் சுர அமைப்பின்படி பாடும் பொழுது கற்சிலைகள் போல் இமை கொட்டாமல் நின்று கேட்டுக் கொண் டிருப்பார்கள்.

தொன் சார்த்தோ ஞாயிற்றுக் கிழமைப் பூசைவேளை சிறுவருக்குப் பிரசங்கஞ் சொல்லும் பொழுது, கேட்டுக் கொண்டிருக்கும் பெரியோருக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வரும். கடவுளைப் பற்றி இன்பரசம் ததும்பப் பேசுவார். மனிதர் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுவதில் கையாளும் சூட்சிகளை நன்கு விபரிப்பார். தமது பிரசங்கத்தில் அதிக வர்ணனைகளையும், கடுஞ் சொற்களையும் அவர் பாவித்தாரில்லை. நாட்டுப் புறத்து எளியபேச்சை அவர் விரும்பினர். சுவிசேஷத்தை உயிர் ஓவியமாக வியாக்கியானஞ் செய்வதில் அவர் நிபுணர். அதனல் கிறீஸ்துநாதர் தோம்பொலோவில் நடமாடக் கண்டதுபோல அச்சனங்கள் விளங்கிக் கொள்வார்கள்.

## அடிமேல் அடியைவைத்து

அர்ச். வென்செஸ்லாஸ் ஒரு பெரிய பிரபு. இவர் தினமும் திவ்வியநற்கருணை சந்திக்கப் போவார். போகும்போது பகல்என்றும், இரவுஎன்றும் பாரார். வெயில்என்றும், குளிர்என்றும் கவனியார். எப்பொழுதும் நற்கருணை நாதரோடு சம்பாஷித்துக் கொண்டு இருப்பதிலே அவருக்கு மிகுந்த ஆசை இருந்தது. ஒருநாள் இரவு இந்த அர்ச்சியசிஷ்டபிரபு தமது ஊழியனோடு திவ்வியநற்கருணை சந்திக்கப் போனர். அன்று இரவு என்றும் இல்லாத விதமாக அதிகம் குளிராய் இருந்தது. பாதையிலே உறைபனி அரைஅடி உயரம்வரை உறைந்து இருந்தது. ஆகையால், அதன்மேல் நடந்துசெல்வது கஷ்டமாய் இருந்தது. பிரபு இந்தக் கஷ்டத்தைப் பறுவாய் பண்ணுது திவ்வியநற்கருணைநாதரைச் சந்திக்கவேண்டும் என்ற ஒரே ஆவலோடு விரைந்து சென்றார். அவரது ஊழியனே குளிர் பொறுக்கமாட்டாமல் பாதங்கள் மரத்துப்போகவே நடக்கமுடியாமல் கீழே உட்கார்ந்தான். இதைக் கண்ட பிரபு அவனை நோக்கி: "அப்பா, எனது அடிமேல் உன்அடியை வைத்து நடந்து என் பின்னே வா; அப்போது உன் குளிர் சற்றே தீரும்" என்றார். ஊழியனும் அவ்வாறே செய்து யாதொரு கஷ்டமுமின்றிப் பிரபுவைப் பின்சென்று போனன்.

நமது இரட்சகரான திவ்விய யேசுவும் கண்ணீர்க் கணவாயான இந்தஉலகில் வருந்திச் சுமை சுமக்கிறவர்களை நோக்கி: "மகனே! என்னைப் பின்சென்று வா; என் அடிமேல் உன் அடியை வைத்து நட; நான் சிலுவை சுமந்து போனதுபோல நீயும் உன் சிலுவையைச் சுமந்து என்பின்னே செல்; என் வருத்தம், கஷ்டம், விழிப்பு இவைகளில் உனக்கும் பங்கு உண்டானல், நான் அடைந்த வெற்றியிலும் உனக்குப் பங்கு உண்டாகும்" என்கிறார்.

இந்தமாதம் யேசுவின் திரு இருதயத்துக்கு ஒப்புக் கொடுக்கப் பட்ட மாதம். வருந்திச் சுமை சுமக்கிறவர்களே, என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று நமது ஆண்டவர் அழைக்கிறார். ஆகையால், நீங்கள் அர்ச். வென்செஸ்லாஸின் ஊழியன் செய்தது போல், யேசுவின் பாதச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்று, நமக்காக அல்லும் பகலும் திவ்விய நற்கருணைப் பேழையில் இருக்கும் அவரைத் தரிசித்து, வேண்டும் வரங்களைக் கேளுங்கள். "சிறுபிள்ளைகளை நமது அண்டை வரவிடுங்கள்; ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுடையது," "கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்" என்று சொன்ன திவ்விய யேசு உங்கள் மன்றாட்டைத் தள்ளமாட்டார். தயவோடு கேட்பார். நிச்சயம்.

S. A. M.

## ஆயருக்கு எம்காணிக்கை

யாழ்நகர் மேற்றிராணியாரான எமது ஞானஆயர் ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் குருப்பட்டம்பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவாகின்றன. பெரிதும் சந்தோஷகரமான இச்சுபசெய்தி அவரது ஞானமக்களாகிய எம்மெல்லோருக்கும் — விசேஷமாகப் பள்ளிச்சிருராகிய எமக்கும் பெருமகிழ்வைத் தரும் சுபசெய்தியாகும். பாடசாலைகளின் மட்டில் ஆண்டவர் அவர்கள் மிகவும் கரிசனை உடையவர். பள்ளிச் சிருராகிய நாங்கள் பிற்காலம் பெரியமனிதராய், நல்லவர்களாய் இருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து எமக்கு அருந்தொண்டு ஆற்றி வருகின்றார்.

அவரது யூபிலிச் சுபதினமன்று எம் பதில் நன்றியை எவ்விதம் அவருக்குக் காண்பிப்பது? யாழ்ப்பாண மேற்றிராசன பரிபாலன சுவாமி அவர்கள் பாதுகாவலன் மூலம் எமக்குத்தெரிவித்தது போல, ஞானப் பூச்செண்டு ஒன்றுகட்டி அன்பளிப்புச் செய்வதே அவருக்குப் பிரியமான காணிக்கையாகும். ஆதலின் திவ்விய பூசை, செபமாலை, திருச் சிலுவைப்பாதை, ஒறுத்தல் முயற்சி, மனவல்லயச் செபங்கள், பிறர்சிநேக முயற்சிகள் ஆதிய ஞான மலர்களை எம்மாற் கூடிய முயற்சியுடன் ஒருசெண்டாகச் சேர்ப்போம். யூபிலித் தினமன்று அவர் கையிற் கொடுத்து எமது நன்றியைக் காண்பித்து அவருக்காக மன்றாடுவோம்.

ய. புஷ்பம்
அச்சுவேலி – வடக்கு

## கல்லூரிவிழா—காவலூர்

காவல்நகர் அர்ச். அந்தோனியார் கல்லூரியின் பாதுகாவலர்திருநாள் இனிதே கொண்டாடப்படலாயிற்று. அன்று கல்லூரிச்சதுக்கம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் திரண்டுவந்து திருநாட்பூசைகண்டு விழாவை ஆரம்பித்தனர். பூசைமுடிந்ததும துறைமுகத்திலே வள்ளவலிப்புப் போட்டிஒன்று கல்லூரியின் முப்பெருங்கழகங்களுக்கிடையே கவர்ச்சிகரமாய் நடந்தேறியது. சாயந்தரம் கல்லூரிமைதானத்தில் பெருந்திரளானோர் கூடிநிற்க விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. அதன்மேல் கல்லூரிச்சதுக்கத்தில் யாவரும் வரவேற்கப்பெற்றுத் தோட்டஉபசாரணை நடைபெறலாயிற்று. பின்னர் கல்லூரி அதிபர் வண. பி. ஜே. ஜீவரத்தினம் சுவாமியவர்களால் வெற்றிபெற்றோர்க்குப் பரிசில்கள்வழங்கப்பட்டு விழா நிறைவாயிற்று.

— நிருபர்

## பாலைக்குளி

இந்தக் கிராமம் மன்னர்-மாந்தை வடக்குப் பகுதியிலே, மாந்தைக்காரியாதிகாரியின் எல்லைக் குட்பட்டதாய், உயிலங் குளத்திலிருந்து அடம்பனுக்குச் செல்லும் குறுக்குத்தெருவில் இருக்கின்றது. இப்பெயர் கொண்ட வேறு இரு கிராமங்களும் நானட்டான் பிரிவிலும், மறிச்சுக்கட்டிப் பகுதியிலும் இருக்கின்றன. ஆனல், இவற்றுள் எல்லாம் இதுவேபெரிதாக விருப்பதால் இதனைப் பெரியபாலைக்குளி என்றும்,மாதோட்டத்தின் வடபிரிவில் அமைந்து இருப்பதால்வடபாலைக்குளி என்றும் அழைப்பர். புராதன நாளையிலே இங்கு பசு, எருமை மந்தைகள் ஏராளமாக இருந்தன. அதனல் மக்கள் அளவுகடந்த விதமாகப் பாலுடன் கலந்துபுழங்கிப் பாலிலேயே குளிப்பது போல் அவ்வளவாக அதனைப் பாவனை செய்துவந்ததால் இதற்குப் பாலில் + குளி = பின்னர் திரிந்து பாலைக்குளி என்னும் காரணப்பெயர் உண்டாயிற்றும். இங்கும், இதன் அயற் கிராமங்களாகிய மூங்கில் முறிச்சான், இத்திக் கண்டல், இலந்தைவான் என்னும் இடங்களிலும் ஆதிக் குடிகளாக வசித்து வருகிறவர்கள் கத்தோலிக்கரே. பின்னர் வந்து குடியேறிய இந்துக்கள்சிலரும் இங்கே வசித்து வருகின்றனர். அர்ச். அடைக்கலநாயகி பேராலுள்ள ஓர் சிற்ருலயமும், ஏறக்குறைய நாற்பதுவருடங்களுக்கு மேற்பட்ட ஓர் கத்தோலிக்க கலாசாலையும் இங்கே உள்ளன. நீர்வளம் உடையதாய் இருப்பதால் இங்கே வருடம் இருமுறை வேளாண்மை செய்யப்படுகிறது. இதனூடாகச் செல்லும் குறுக்குத்தெரு கேவல நிலையில் இருப்பதால் பிரயாணகஷ்டம் உடையதாய் இருக்கிறது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் அடம்பன், உயிலங்குளம் முதலிய பெரிய கிராமங்களுக்குச் சென்று சாமான்கள் கொள்வனவு விற்பனவு செய்து கொள்ளுகிருர்கள். இன்னும் இங்குள்ள கமத்திடர் ஒன்றிலே பழைய காலத்தில் செபஸ்தியார் கோயில்ஒன்று இருந்தது என்பதும், அதனல்தான் அந்தக்கமம் இன்றும் கோவிலடிக் கமம் என அழைக்கப்பட்டு வருகின்றது என்பதும், இதன் அயற் கிராமங்களில்ஒன்ருன இலந்தைவானில் தான் பண்டைய புலவர் திலகமாகிய சீத்தாம்பிள்ளை என்பவர் வசித்து வந்தார் என்பதும் ஈண்டுகுறிப்பிடற்பாலதாகும். இவர் பல சத்தியவேத நாடகங்களை ஆக்கி இருக்கின்றார். அவற்றில் அதிகம் மேலானதாக இன்றும் மதிக்கப்பட்டு வருவது "என்றிக் எம்பரதோர்" நாடகமே. இங்கு விதைப்பு, அறுவடை காலங்களில் மக்கள் கூட்டங் கூட்டமாகப் பணிபுரியும் காட்சி மிக மாட்சியாய் இருக்கும்.

— [illegible]

## ஞானப் பூச்செண்டு

மேல்வரும் பாடசாலைகள் பூச்செண்டு விபரம் அனுப்பியிருக்கின்றன என்பதைச் சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நல்லாயன் | பெண் பாடசாலை, | | மன்னர் |
| 2. | இறம்பைக்குளம் | ,, ,, | | வவுனியா |
| 3. | சம்பத்திரிசியார் | ,, ,, | (4) | முல்லைத்தீவு |
| 4. | ரோ. க. | ,, ,, | (2) | பேசாலை |
| 5. | சென் செபஸ்தியார் | ,, ,, | | காம்பன் |
| 6. | சென் தெரேஸா | ,, ,, | | அச்சுவேலி |
| 7. | அர்ச். அந்தோனியார் | ,, ,, | | பாஷையூர் |
| 8. | அர்ச். தோமையார் | ,, ,, | | பருத்தித்துறை |
| 9. | யசிந்தா ரோ. க. | ,, ,, | | பண்டத்தரிப்பு |
| 10. | ரோ. க. க. | பாடசாலை | (3) | முதலியாகுளம் |
| 11. | ,, ,, ,, | ,, | (2) | விடத்தல்தீவு |
| 12. | ,, ,, ,, | ,, | | தேவம்பிட்டி,வெள்ளாங்குளம், |
| 13. | சந்தியோகுமையோர் பாடசாலை, | | | யாழ்ப்பாணம், |
| 14. | ,, | ,, | | துள்ளுக்குட்டிக் குடியிருப்பு. |

## செபமாலையின் வல்லமை

கத்தோலிக்க மதத்திற்கு மனந்திரும்பிய ஒரு சிநேகிதன் கொடுத்த ஒரு செபமாலையும், இஸ்பிரீத்து சாந்து சருவேசுரனை நோக்கிச் சொன்ன செபமும் புரொட்டஸ்தாந்த சமயப் போதகர் ஒருவரை மனந்திருப்பின.

அவர்தான் முன்னர் எப்பிஸ்கோப்பல் பிரிவினைச் சபைப் பாதிரியாராய் இருந்த ஜேம்ஸ் ஹறி பிறைஸ். "எனது செபமாலையை உபயோகிக்கத் தொடங்கியதும் அதன் வல்லமையை உணர்ந்தேன்; அதை உபயோகித்ததின் பலனைகப் பல வருடங்களாக என் மனதில் இருந்த எண்ணமும், வேண்டுதலும் உருப்பெற்றுத் திருச்சபையிற் சேர்ந்து கொண்டேன்.

—எம். ஜேயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுச் சுடர்

**1.** திருச்சபையிலே எந்தப்பாப் பானவரால் மிகப்பெருந்தொகையான அர்ச்சியசிஷ்டபட்டங்கள் அருளப் பட்டன?

மிகநீண்டகாலம் திருச்சபையை ஆண்டுவந்த 9-ம் பத்திநாத பாப்பானவரால்தான். இவர் 52 பேருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளினர்.

**2.** 13-ம் சிங்கராய பாப்பானவரால் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப் பெற்றவர்கள் எத்தனைபேர்?

பதினெட்டுப்பேர்.

**3.** அர்ச். பத்தாம்பத்திநாத பாப்பானவர் எத்தனைபேருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளியிருக்கிறார்?

நாலுபேருக்கு அருளினர். அவ்வாறே 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவரும் நாலுபேருக்கே அர்ச்சியசிஷ்டபட்டம் அருளியிருக்கிறார்.

**4.** 11-ம் பத்திநாத பாப்பானவர் எத்தனைபேருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்திருக்கிறார்?

32 பேருக்கு அளித்திருக்கிறார். அவ்வாறே தற்போது திருச்சபையை ஆண்டுவருகிறவரான 12-ம் பத்திநாத பாப்பாசரும் இதுவரை 32 பேருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்திருக்கிறார்.

**5.** திருச்சபையின் முதல் 32 பாப்புமாரையும்பற்றிய விசேஷங்கள்என்ன?

அர்ச். பேதுருவானவர் காலமுதல்—கி. பி. 313-ம் ஆண்டு திருச்சபைக்குச் சுதந்திரம்அளித்துக் கொன்ஸ்ரான்ரின் சக்கரவர்த்தி மிலான்நகரில் ஆஞ்ஞாபத்திரம் விடுக்கிறவரையில் திருச்சபையைஆட்சிசெய்த முதல் 32 பாப்புமாருமே அர்ச்சியசிஷ்டர்கள். இவர்களில் மூவர்நீங்கலாக மற்றெல்லோருமே வேதசாட்சிகள்.

**6.** கி. பி. 313-ம் ஆண்டுமுதல் 1000-ம் ஆண்டுவரை எத்தனைபாப்புமார் திருச்சபையை ஆட்சிசெய்திருக்கின்றனர்?

108 பாப்புமார் ஆட்சிசெய்திருக்கின்றனர். இவர்களில் 41 பேரே அர்சியசிஷ்டர்கள். இவர்களுள் அர்ச். ஜோண் (526) — அர்ச். சில்வேரியார் (537) எனும் வேதசாட்சிகள் இருவரும் அடங்குவார்கள்.

**7.** கி. பி. 1000-ம் ஆண்டுமுதல் இன்றுவரை எத்தனைபாப்புமார் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பட்டுள்ளனர்?

நால்வர்மாத்திரமே அருளப்பட்டுள்ளனர். அர்ச். சிங்காரயர் (1054), அர்ச். ஏழாவது கிறகோரியார் (1078), அர்ச். ஐந்தாவது செலஸ்தீன் (1296), அர்ச். ஐந்தாம் பத்திநாதர் (1572) இவர் 1712-ம் ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றனர்.

**8.** தற்போது திருச்சபையிலே அர்ச்சியசிஷ்டர்களான பாப்புமாராய் எத்தனைபேர் இருக்கின்றனர்?

77 பேர் இருக்கின்றனர்.

**9.** பிரித்தானியதேசத்திலே வாரம் ஒன்றுக்கு எத்தனை றுத்தல் தேயிலை செலவாகின்றது?

ஏறக்குறைய ஒருகோடிறுத்தல் தேயிலை செலவாகிறது.

**10.** துருக்கியின் பழையதலைநகர் எது?

இஸ்தம்பூல். இதுமுன்னர் கொன்ஸ்ரன்ரின் சக்கிரவர்த்தியின்பெயரால் கொன்ஸ்ரான்ரிநோப்பிள்என அழைக்கப்பட்டுவந்தது. இந்தச்சக்கிரவர்த்தியின் காலத்துக்குமுன் பைசான்ஷியம் என்பது அதன்நாமம். தற்போது துருக்கியின் தலைநகர் அங்காரா.

**11.** கிறிஸ்ரியானியாநகர் எங்கே உள்ளது?

இது நோர்வேநாட்டில் உள்ளது. அதன்தலைநகர் இந்தநாமங்கொண்டே அழைக்கப்பட்டுவந்தது. கிறிஸ்ரியன் என்பது நோர்வேமன்னர் ஒருவரின் பெயர். பிந்தஇதன்பெயர் ஒஸ்லோ என மாற்றப்படலாயிற்று. ஒஸ்லோ என்பது ஆதியில் நோர்வேநாட்டை அடியிட்ட மன்னரின்பெயராகும்.

**12.** உலகில் அதிகங் குறுகிய — அதாவது மிகவும்குள்ளமான சாதியினர் எங்குவசிக்கின்றனர்?

தென்னுபிரிக்காவிலும், மத்தியஆபிரிக்காவிலும் வசிக்கின்றனர். இவர்களிலே தென்னுபிரிக்காவில்வசிக்கும் புஷ்மன்சாதியாரின் சராசரி உயரம் 4அடி 7அங்குலம். மத்தியஆபிரிக்காவில்வசிக்கும் பிக்மிச்சாதியாரின் சராசரிஉயரம் 4 அடி 10 அங்குலம்.

**13** ரோமைநகரிலே அர்ச். பத்தாம்பத்திநாதர்பேரால் கோவில்ஒன்று கட்டியெழுப்ப ஆயத்தம்நடக்கின்றதா?

ஆம், அவர்பேரால் கோவில்கட்டும் இயக்கம்ஒன்றை அந்நகரிலுள்ள விசாரணைப்பங்குக்குருமார் ஆதரித்துவருகின்றனர். அது கட்டப்படுமிடத்துத் தேவநற்கருணைப்பக்தியின் ஓர்விசேஷமத்தியதானமாய் அது ஏற்படுமென அவர்கள்நம்புகின்றார்கள்.

**14.** மிகப்பெரிய நண்டுகள் எங்கே காணப்படுகின்றன?

யப்பானியகடல்களில் காணப்படுகின்றன. இவற்றிற்கு நீண்டகால்கள் இருப்பதால் சிலந்திநண்டுகளென அழைக்கப்படுகின்றன. இவற்றின் இரண்டுபக்கங்களிலுமுள்ள நீண்டகால்களை நீட்டிப்பிடித்தால் ஒருஅந்தத்திலிருந்து மறுஅந்தம் வரையிலுள்ளதூரம் பத்துஅடியாகும்.

## நானு சங்கதிகள்

— பத்தாம்பத்திநாத பர்ப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுதற்கான விசாரணையைமுடித்ததும் திருச்சடங்காசார திருச்சங்கமானது மற்றும்ஓர்தொகையான பாப்புமாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டமும், அர்ச்சியசிஷ்டபட்டமும் அருளுதற்கான விசாரணையிலே தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. இந்தப்பாப்புமார்களில், 1878-ம் ஆண்டு பரமபதம் அடைந்த ஒன்பதாம்பத்திநாத பாப்பானவரும் ஒருவராவர்.

— பத்தாம்பத்திநாதரின் அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவத்துக்குச் சமுகமளிக்கவிரும்பிய ஐந்து யூகோசிலேவிய மேற்றிராணிமாருக்கு அந்நாட்டின் கம்யூனிஸ்தஅரசாங்கம் "பாஸ்போட்" வழங்க மறுத்துவிட்டது. ஹங்கேரிய, செக்கோசிலவாகிய மேற்றிராணிமாரும் ரோமாபுரிக்குச்செல்ல அனுமதிகேட்டபோது அந்நாடுகளின் கம்யூனிஸ்தஅரசாங்கங்களும் மறுத்துவிடலாயின.

— இத்தாலிய ஜனதிபதியான சிஞ்ஞோர் எய்ஞோதிஅவர்கள் பத்தாம் பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டமருளும் திருவைபவத்தைச் சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்துக்குமேலாகவுள்ள ஓர்மாடியின் சன்னலிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தார். இத்தாலியபிரதமர் சிஞ்ஞோர் சிசெல்பாஅவர்களும், வெளிநாட்டு மந்திரியார் சிஞ்ஞோர் பிக்கியோனி அவர்களும் இத்தாலிய ஒன்பதுமந்திரிமாரினதும் தூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்து அத்திருவைபவத்தின்போது சமுகமாயிருந்தார்கள்.

— தென்னமெரிக்காவிலே மனிதருக்கு மிகவும் அச்சந்தருவதும், பிராணுபாயமுமானபிராணி முதலையும் அல்ல. விஷப்பாம்புமல்ல ஆனல், பிறன்ஹாஎன்ற ஆறுஅங்குலநீளமான ஓர்சிறிய மீனேயாகும். இது ஓர் மாமிசபட்சணி. இந்தமீன்கள் ஆயிரக்கணக்கிலே கூடிச்சென்று சமீபமாக ஆறும்மனிதன் அல்லதுமிருகம் எதிர்ப்பட்டால் அந்தப்படியே கிறிக்கிழித்துப் பட்சித்துவிடுமாம்.

— ஸ்பானியஅரசாங்கம் பத்தாம் பத்திநாதரின் அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவத்துக்குத் தனதுபிரதிநிதிகளாகத் தன்னுடைய நீதிமந்திரியாரான செனியோர் பாஜெலெஸ்அவர்களேயும், அர்ச். பத்தாம்பத்திநாதரின் இராசசியமந்திரியாராயிருந்த கருதினல் மெறிடெல்வால்ஆண்டவரின் சகோதரர்புதல்வரான கவுண்ட் பபிளோமெறிடேல்வால்பிரபுவையும் அனுப்பிவைத்தது.

— "சமாதானத்துக்காகப் பிரார்த்தியுங்கள்" என்ற வார்த்தைகளைத்தாங்கிய ஓர்தபால்முத்திரையை அமெரிக்க ஐக்கியதேச தபாற்கந்தோர்ப்பகுதி பாவனைக்கு விடுக்கவேண்டுமென்று கேட்டு அத்தேசபாராளுமன்றத்திலே மிச்சிக்கனைச்சேர்ந்த பிரதிநிதியான திரு. லூயிஸ் ருபோட்அவர்கள் ஓர் பிரேரணைகொண்டுவந்திருக்கின்றார்.

— ஜப்பானியதேச நிஞேமியானுமிடத்தில் கட்டியெழுப்பப்பெற்ற புதிய கோவில்ஒன்று அர்ச். பத்தாம்பத்திநாதர்பேரால், அவர் அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூடியமறுதினம் அர்ப்பணஞ்செய்யப்பட்டிருக்கிறது. யொக்கோஹாமாநகரின் அருய்மேற்றிராணியார் இதனை ஆசீர்வதித்துப் பிரதிஷ்டைசெய்யலாயினர்.

— இந்த மரியாயின்வருடத்திலே இத்தாலியின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மரியாயின்திருசேத்திரங்களுக்கு யாத்திரைசெய்கிறவர்களுக்கெல்லாம் இத்தாலியஅரசாங்கம் றெயில்வேப்பிரயாணசலாரைக் குறைத்திருக்கின்றது. மரியாயின்வருடம் வருகிறமார்கழிமாதம் 8-ந் திகதி முடிகிறவரையிலே இந்தக்குறைந்தசலார்வீதம் நடைமுறையில் இருந்துவரும்.

— பிரித்தானியதேசத்தில் மாத்திரமல்ல, ஏனைய ஐரோப்பியநாடுகள், அமெரிக்க ஐக்கியதேசத்திலுமே தற்போது தேயிலைக்கேற்படும் தேவைபடிப்படியாக அதிகரித்துக்கொண்டுவருகின்றது. அவற்றிலே காப்பி, கொக்கோவின் விலைகள் வெகுவாகக் குறைந்தும் தேயிலைப்பாவனை அதிகரித்துவருவதைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறதாம்.

— இந்தியாவிலே சீர்காழியைச் சேர்ந்த கிஸான் தலைவர்கள்ஐவர் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து விலகியிருக்கின்றனர். "கம்யூனிஸ்தர்களின் நடவடிக்கைகளில் கொள்கைகள்எதுவுமே காணப்படவில்லை; அதனல் கிஸான்களுக்கோ, பொதுமக்களுக்கோ யாதாமோர் நன்மையும் ஏற்படமுடியாதென நாங்கள் கருதுகிறோம்" என்று இந்த ஐந்துதலைவர்களும் கூறியிருக்கிறார்கள்.

— பாகிஸ்தானின் காலஞ்சென்ற பிரதமர் லியாகாத் அலிகானின்மனைவியார் ஒல்லாந்தஅரசினிடமாகப் பாகிஸ்தான்ஸ்தானிகராக நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார். முஸ்லீம்நாடுகளிலிருந்து ஒருபெண்மணி பிறநாடுஒன்றுக்கு ஸ்தானிகராகஅனுப்பப்படுவது இதுவேமுதன்முறையாகும். பீகம் லியாகாத்அலிகான் தனதுஸ்தானிகர் பதவியை வருகிறபுரட்டாசிமாதத்தில் ஏற்பாரெனத் தெரியவருகிறது.

— வடஇந்தியாவிலே ஜான்ஸிநகரிலிருந்து அறுபதுமைல் தூரத்திலுள்ள கிராமம்ஒன்றில் 18 வயதுள்ள ஓர்ராஜபுத்திரபெண் சென்ற 20-ந்திகதியன்று 24 வயதுடைய தனதுகணவர் இறந்துபோகவே, உடன்கட்டைஏறித் தானும் மாண்டுபோயினள். உறவினர்கள் எவ்வளவோசொல்லித் தடுத்துப்பார்த்தும் அந்தப்பெண் தனது கணவருடன் உடன்கட்டை ஏறிவிட்டாளாம். இச்செய்தியைக் கேள்விப்பட்டு அயற்கிராமவாசிகள் திரண்டுவந்து காட்சிபார்த்து, அப்பெண்ணின்ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்தித்தும் கொண்டார்கள்.

## என்றைக்கோ ஒருநாள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலைநோக்கி நடந்தான். வழியிலேயே அவன்கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக ஓடியது. ஆம், மூன்று வருடங்களுக்குமுன் இவ்வழியே யான் வந்தேன்; அதாவது என்மக்கள் இறப்பதற்குமுன்; ஆனல், இப்போது பழையபடியும அவாணையில் போகவேண்டியவனு யிருக்கின்றேன் என்று சொல்லிக்கொண்டே கோவில்வாசலை அண்டினன். உள்ளே நுழைந்தான். புதிதாகஅமைக்கப்பட்டிருந்த கல்வாரிமலை அவன்கண்களுக்குத்தென்பட்டன. மலையில் நாட்டியிருந்த திருச்சிலுவை அவன்மனதை மாற்றியது. உடனேசென்று அதை அணைத்துப்பிடித்து முழங்காலிலிருந்தான். தனதுஏகபுதல்வனை இம்மனுக்குலத்துக்குப் பலிகொடுத்த தேவஅன்னையின் வியாகுலத்தைவிட என் வியாகுலம்பெரிதோ? கடவுள் என் அருமைமக்கள் இருவரையும் எடுத்துக்கொண்டபொழுது யானஅவர்மீது குரோதங்காட்டினேன்; ஆனல், என் தேவனே! இப்பொழுது என்மகள் மரியாள் உமதுசித்தப்படி சுகப்பட்டால் சுகப்படட்டும்; அன்றேல் உமதுஇஷ்டப்படியே ஆகட்டும்என்று பலவாறு கப்புலம்பினன். சிறிதுநேரம்சென்றதும் எழுந்து கோவிலுக்குள்சென்று தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் பாவசங்கீர்த்தனம்செய்தபின் வீடுபோய்ச்சேர்ந்தான்.

மரியாள் தன்தந்தையின் மனந்திரும்புதலுக்காகச் செய்துகொண்ட செபம் பலிதமானது. அவனும் மரியாளின்சுகத்துக்காக வேண்டிக்கொண்டது பலிதமாயது. எமீலி ஓடிவந்து: "ஐயா! நீங்கள்போனபின் மரியாள் கொஞ்சம் ஆகாரம்கேட்டாள்; கொடுத்தேன்; சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறாள்; சிறிதுநேரத்துக்குமுன்னிருந்த அவநம்பிக்கையான தோற்றங்கள் இப்போது காணப்படவில்லை; அவள் குணப்பட்டுவிடுவாள் என்ற பூரணநம்பிக்கைக்கு இடமிருக்கின்றது" என்று சந்தோஷமாகக்கூறினள்.

நாளுக்குநாள் மரியாள் ஆரோக்கியம்அடைந்து கடைசியாகப் பூரண சுகம்பெற்றாள். இப்போதுமரியாளும், அவள்தந்தையும் ஒன்றாகப்போய்ச் சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

---

உடன்கட்டையேறிய பெண்ணின் மாமனையும், மைத்துனனையும் பொலிசார் கைதுசெய்திருக்கின்றார்கள்.

— தென்னிந்தியாவிலே திருவாரூரில் சென்ற 7-6-54 திங்கட்கிழமை நடந்தேறிய ஓர் பொதுக்கூட்டத்தில் திரு. ஈ. வே. இராமசாமி நாயக்கர் பேசியபோது, கம்யூனிஸ்தர்கள் பாமரமக்களைஏமாற்றிச் சந்தாப்பணம் சேகரிக்கிறார்களென்றும், அவர்கள் சுயநலக் கும்பலென்றும், அவர்களுடைய வலையில் சிக்கக்கூடாதென்றும் கமத்தொழிலாளர்களை எச்சரித்திருக்கின்றார்.

— பம்பாயிலே இம்முறை எல். எல். பி. எனப்படும் சட்டசாஸ்திர பட்டம் பெற்றவர்களில் குருடர் ஒருவரும் அடங்கியிருக்கிறார். ராஜேந்திராஎன்ற பெயருடையஇவர் எட்டுவயதிலே தனது கண்பார்வையைஇழந்து குருடராயினர். ஆயினும், அயராஉழைப்பாலும், விடாமுயற்சியாலும் சிலகாலத்தின்முன் எம். ஏ. பட்டம் பெற்றுக்கொண்டஇவர் தற்போது எல். எல். பி. பட்டமும்பெற்று ஓர்பரிஸ்றராகியிருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 24-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org